
பிள்ளை

ஒரு

செல்வம்



மாண்புமிகு
முதல்வர்
டாக்டர் கலைஞர்
மு. கருணாநிதி

தமிழ்நாடு குடும்பநலத்துறை வெளியீடு

பேராசிரியர். தி.வ. மெய்கண்டார் அவர்களின்

அன்பளிப்பு

பிள்ளை

ஒரு

செல்வம்



மாண்புமிகு முதல்வர்

டாக்டர் கலைஞர்

மு. கருணாநிதி

தமிழ்நாடு குடும்பநலத்துறை வெளியீடு

மாநில குடும்ப நல அச்சகம், சென்னை-6.



தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின்
பிறந்த நாளன்று
மாலையணிவித்து மகிழ்கிறார் பேராசிரியர்

மழலைச் செல்வம்

'குழந்தை' என்ற சொல்லைக் கேட்டதும் மகிழாதார் யாருமில்லை. அந்த மழலைச் செல்வத்தின் இனிமையை தமிழ் மறை,

குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்

எனக் கூறுகிறது. பெறத்தக்க பெரும் பேறுகளில் 'மக்கட் பேறு' சிறப்புடையதாகும்.

இத்துணை சிறப்புடைய மழலைச் செல்வம் மதிக்கப்பட வேண்டும்—பேணப்படவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப் படையிலேதான் இன்றைய குடும்ப நலத் திட்டம் செயல்படுத் தப்படுகிறது. பிறந்து விட்ட பிள்ளைகளை முறையாக— கொடுக்க வேண்டிய வாய்ப்பு வசதிகள் அனைத்தையும் கொடுத்துச் சீராக வளர்த்து, நல்ல குடிமக்களாக நாட்டுக்கு நல்கிடுல், நம் தமிழ்நாடு எப்பொழுதும் முன்னணியில் இருக் கும். அதற்கு குடும்பநலம் மிக மிக இன்றியமையாத ஒன்று. நாடே விழாவெடுக்கிறது. மக்களிடையே பெரும் விழிப் புணர்வை ஏற்படுத்தவும், ஒவ்வொரு வீடாகச் சென்று தனித் தனியே அணுகி, இத்திட்டத்தின்பால் அவர்களை ஈடுபாடு கொள்ளச் செய்யவும் குடும்பநல விழா பயன்படும்.

பொருளாதார சுதந்திரத்திற்காகப் போராடும் நாம், சமுதாய விடுதலை அல்லது மேம்பாட்டிற்காக அளவோடு பெற்று, சிறு குடும்பம் அமைத்துத்தான் வாழவேண்டும். நாட்டு நிலையுணர்ந்து, அளவிறந்த குழந்தைகள் வேண்டுமென்ற ஆசையினைத் துறந்து, ஆணே, பெண்ணே, அது எதுவாக இருந்தாலும், 'இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்' என்ற முடிவோடு வாழ்வதுதான், இன்றைய பொருளாதார விடுதலைக்கு—சமுதாய விடுதலைக்கு ஆற்றும் பெரும் தியாக மாகும்.

பல்கிப் பெருகிவரும் மக்கள்தொகைப் பிரச்னையை சமாளித்தாக வேண்டிய கட்டாய நிலையில் உள்ளோம் நாம். இதற்கு வழி ஒன்றே ஒன்றுதான். வளர்ந்துவரும் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப தொழில் துறைப் பெருக்கத்

தையும், பசுமைப் புரட்சியின் வாயிலாக வேளாண்மைத் துறையில் உற்பத்திப் பெருக்கத்தையும் கண்டாக வேண்டும். அதே நேரத்தில் குடும்ப நலத் திட்டத்தின் வாயிலாக மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுக்குள் நிலை நிறுத்தியாக வேண்டும். மக்கள்தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப மற்ற மற்ற துறைகளில் உற்பத்தியைப் பெருக்கி ஈடுகட்டுவது என்பது அவ்வளவு எளிதானதல்ல. எனவே, நடைமுறைத் திட்டத் திற்கு உகந்த முறை, மக்கள்தொகைப் பெருக்கத்தைக் கட்டுக் குள் நிலை நிறுத்தித் திட்டங்கள் வாயிலாக ஏற்படும் பயன மக்கள் இடையே பரவலாக்குதல் தான்!

பெருக்கம் நீடிக்காதிருக்கவும், பிறப்பு விகிதத்தை 1,000-க்கு 25 ஆகக் குறைக்கவும், அதன் வழி அடுத்த சில ஆண்டுகளுக்குள் மக்கள்தொகை வளர்ச்சியை ஆண்டுக்கு 1.5 சதவிகிதத்திற்குக் கொணர்வதும், தாய்-சேய் நலம் காப்பதும்தான் குடும்ப நலத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் தமிழக மக்களின் நல்லாதரவைப் பெற்று வருகிறது. நல்லாதரவு, பேராதரவாக மாறி நம்பிக்கை ஒளியூட்டுவதாக வேண்டும்.

கோடி கோடியாகப் பணத்தைச் செலவு செய்து நிறை வேற்றப்படும் இத்திட்டத்தின் வெற்றி, வகுக்கப்பட்ட திட்டத் தைச் செயல்படுத்துவதில் ஈடுபட்டுள்ள ஆயிரமாயிரம் அரசு ஊழியர்கள், தனியார் நிறுவனப்பணியாளர்கள் ஆகியோரின் செயல் திறனில் அடங்கியிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக மக்களின் பேராதரவில்—ஒத்துழைப்பில்தான் இத் திட்டத்தின் வெற்றி அடங்கி இருக்கிறது. அரசுடன் தோளோடு தோள் நின்று, திட்டத்தை நிறைவேற்றுவதில் ஆதரவு நல்கி துணை நிற்க வேண்டுகிறேன். அது உங்கள் கடமை என உணர வேண்டுகிறேன்.

ஆதரவு நல்கி வெற்றிக்கு உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**

நாம் இருவர்
நாம் பெறுவதும் இருவர்

நல்ல குடும்பம் பல்கலைக் கழகமென்றார் பாரதிதாசன். பல்கலைக் கழகத்து மாணவர் எண்ணிக்கை போல் குடும்பத்தில் பிள்ளைகள் தொகை கூடிட வேண்டும் என்பதல்ல அதற்குப் பொருள். அறிவும் திறனும் செறிந்த அழகோவியச் செல்வங்கள் ஒன்றிரண்டு பெற்று, மனத்தலைவனும் இல்லத்தரசியும் இன்புற்று வாழ்வதையே பல்கலைக் கழகத்திற்குப் பாவேந்தர் ஒப்பிட்டார் என்ற உண்மையை அனைவரும் உணர்ந்திட வேண்டும். குறிப்பிட்ட வருமானமுடைய ஒரு குடும்பத்தில் ஆண்டுக்கொரு குழந்தைவருமானமும் பெருகிவிடுமானால், வசதிகளும் வாய்ப்புகளும் எல்லாக் குழந்தைகளுக்கும் பங்கிடப்பட்டேயாக வேண்டும். எட்டு ரொட்டித் துண்டுகளை இரண்டு குழந்தைகளுக்கு நாலுநாலாகப் பிரித்துக் கொடுத்து, அவை மனநிறைவோடு உண்டது கண்டு உளங்களிக்கும் தாயும் தந்தையும், அதே எட்டு ரொட்டித்துண்டுகளை ஆறு குழந்தைகளுக்குப் பங்கிட்டு, அவர்களும் ஆறுதல் பெறுமல், குழந்தைகளும் களிப்படையாமல் அவதிப்படும் காட்சிகள் தவிர்க்கப்பட வேண்டாமா?

வீடும் நாடும்

வீட்டின் நிலையே இது எனில், நாட்டின் நிலையை சிந்திப்பது இன்றியமையாத ஒன்றல்லவா? கோடிகோடியாகச் செலவழித்துத் திட்டங்கள்—கோபுர உயரத்தில் உணவுதானியக் குவியல்கள்—கோலமிகு சாலைகள்—குளிர்தரும் சோலைகள்—கல்விச் சாலைகளா, கணக்கின்றி வழங்குவோம்—மருத்துவ வசதியா, தடையின்றித் தருகின்றோம்—பின்தங்கியோர் நலனை, விரைந்து நிறைவேற்றுவோம்—தாழ்த்தப்பட்டோருக்கு உயர்வா, தடையில்லை அளிப்பதற்கு!

எல்லாம் சரி; எட்டு ரொட்டித்துண்டு: இரண்டே குழந்தைகள் என்றால் வழங்குபவருக்கும் மகிழ்ச்சி — பெறுபவருக்கும் பேரானந்தம். ரொட்டித்துண்டு எட்டுத்தான், குழந்தைகள் ஆறு எனில், ரொட்டியும் எட்டியாகுமே, தேவைக் கேற்ப கிடைக்காத காரணத்தால்.

கடல்களை மூன்று பக்கமும் எல்லையாக கொண்டிராமல் கடலின் மீது மிதக்கும் ஒரு தெப்பமாக இந்தியா இருந்திருந்தால், இந்நேரம் கடலுக்குள் மூழ்கியிருக்கும் மக்கள் தொகை தாங்காமல்! அந்த அளவுக்கு ஆண்டுக்கு ஆண்டு ஆண்டவன் மீது பழியைப்போட்டு விட்டு,

"அவன் கொடுத்தான் நாமென்ன செய்ய"

என்று குடும்பத்தைப் பெருக்கிக்கொண்டிருக்கிறார்கள் இந்திய நாட்டில்!

ஆண்டவர்களிலே கூட சிவனுக்கு இரண்டு பிள்ளைகள் தான்! இருபத்தேழு பிள்ளைகளைப் பெற்ற குசேலர் தந்த அவலுக்குப் பதிலாக, மாடமாளிகை, கூடகோபுரங்களைப் பரிசாக அளிக்க ஒரு கண்ணன் இருந்தான். அந்தக் கண்ணன் கூட எல்லோருக்கும் அருள முடியுமா? எப்போதும் அருள முடியுமா?

குழந்தைகளும் குடிசையும்

குழந்தைகளை மலர்கள் என்கிறோம்—மாணிக்கப்பரல்கள் என்கிறோம். அதன் கண்கள் நீலோற்பலம்! இதழ்கள் ரோஜா! சிரிப்பு பிறைநிலா! அசைவு தென்றல்! வடிவு தங்கப்பதுமை! இப்படியெல்லாம் கொஞ்சு தமிழில் குழந்தைகளை வர்ணிக்கும் கவிதை உள்ளங்கொண்டோரே, கொஞ்சம் என்னுடன் இந்தக் குடிசைப் பகுதிக்கு வாருங்கள்.

அதோ, கிழிந்த சாக்குப்படுதா தொங்குகிறதே அதுதான் அந்த மாளிகையின் மரக்கதவு! சேறும் சகதியும் வழிந்தோடுகிறதல்லவா வளைந்து வளைந்து, அதுதான் அந்த அரண்மனையைச் சுற்றியுள்ள அகழி! அகழிமீது துள்ளிவிளையாடுகிறதே தொப்பை சுருங்கிய ஒரு குழந்தை, அதுதான் அந்த வீட்டு மகாராணியின் முதல் இளவரசன். அடுத்து ஒன்று சூம்பிய கால்களுடன் தள்ளாடித் தள்ளாடி ராகம் பாடுகிறதே, அது இளவரசி. மகாராணியின் தோள்மீது ஒன்றும், மடிமீது ஒன்றும் எலும்புக் குச்சிகளாய்த் தேரைகள்போல் ஒட்டிக் கொண்டு, சிணுங்கி அழுவதற்கும் ஜீவனில்லாமல் கிடக்கின்றனவே அவைதான் மலர்க் கொத்துக்கள்—மாணிக்கப்பரல்கள். இப்படியொரு உலகம், இந்தியா முழுமையும் அழகு முகத்தின் குறுமருக்கள் போல் பரவிக்கிடக்கிறது.

வேதனை அதிகம்!

திட்டங்களின் பயன்கள் அந்த 'நரகலோக' வாசிகளைச் சென்று தொட வேண்டாமா? பறவைகளும், விலங்குகளும் வாழ்கின்றன. மனிதன் வாழ்க்கை நடத்துகிறான். இதைச் சொல்லச் சுவையாக இருக்கிறது. ஆனால் நடைமுறையில் விலங்குகளைவிட மனித சமுதாயத்தின் பெரும் பிரிவு வேதனையை அதிகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

அந்த வேதனை நீங்கிட, நல்லரசு, திட்டங்களை உருவாக்குகின்றது. திட்டங்கள் பயன் விளைக்க, மக்கள் பெருக்கம் தடுக்கப்பட்டாக வேண்டும். பிறந்த குழந்தைகளைப் பேணி வளர்க்க இனியும் குழந்தைகள் பிறக்காமல் தடுத்திடல் வேண்டும். இந்தக் குடும்பக் கட்டுப்பாடு பாபகாரியமா? அளவுக்கு மீறி குழந்தைகளைப் பெற்றுவிட்டு, அவை சரியான வசதிவாய்ப்புகளற்று ஆலாய்ப்பறக்கின்ற கொடுமைதான் கடைந்தெடுத்த பாப காரியமாகும். பாப, புண்ணியத்தின் உண்மையான பொருளை உணர்ந்து கொண்டு நடப்பவர்களே சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் நல்ல தொண்டாற்றுகிறார்கள் என்று போற்றிட முடியும்.

யானைப்பசியும் சோளப்பொரியும்

இந்தியாவில் வேலை வாய்ப்பு தருதல் என்பது இன்று விண் முட்ட எழுந்து நிற்கும் மிகப்பெரிய பிரச்னையாகும். அதனைத் தவிர்ப்பதற்கு இதுவரை எடுத்துள்ள முயற்சிகள் யானைப் பசிக்கு சோளப்பொரி அளித்தது போலத்தான் என்று சொல்லிக் கொள்ள யாரும் வெட்கப்படத் தேவையில்லை. யானை பசிக்கேற்ற உணவினைத் தயாரித்து முடித்திடும்போது, யானை பெரும் சோனையாகி விடக்கூடாதல்லவா? அதற்குத்தான் குடும்ப நலத்திட்டத்தில் அனைவரும் ஆர்வத்துடன் அக்கறை காட்டிட வேண்டும்.

பிறந்துவிட்ட குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டம் மட்டுமன்றி, சத்துணவுத் திட்டம் ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டு குடிசைப் பகுதிகளில் உள்ள குழந்தைகள் வலிவோடும், பொலிவோடும் வளர்வதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. எந்தத் தீவிர முயற்சிகளாலும் அவற்றின் பயன்கள் எத்தனை பேருக்குச் சென்றடைய வேண்டும் என்ற அளவுகளைப் பொறுத்தே வெற்றிகளை ஈட்டிட முடியும்.

அரசு, ஆடவர், பெண்டிர்!

அந்த வெற்றிகளை உருவாக்க அரசு, ஆடவர், பெண்டிர் ஆகிய இந்த மூன்று தரப்பினரின் ஒத்துழைப்பும் இருந்து குடும்ப நலத்திட்டம் நல்ல வகையில் பரவிட வேண்டும். இந்த மூன்று சாராரின் ஒத்துழைப்பைக் குறிக்கும் வகையில் அமைந்ததுதான் சிவப்பு முக்கோண அடையாளமாகும். குடும்ப நலத் திட்டம் பரவிட அரசாங்கம் அதிகாரிகளை நியமிக்கலாம்—ஆலோசனைகள் பலவற்றை விவரித்துச் சொல்லலாம். அறுவைச் சிகிச்சைக்கெனத் தனித் தொகை ஒதுக்கலாம்—இவைகளுக்கெல்லாம் மேலாக அவரவரும் குழந்தைப் பெருக்கத்தால் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படும் நெருக்கடியையும், முன்னேற்றத் திட்டங்களில் ஏற்படும் முட்டுக்கட்டையையும் புரிந்து நடந்திட முனைந்திட வேண்டும்.

'பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க'என வாழ்த்திடுவர் முன்னோர்! பெறுவது என்றாலே குழந்தைகள்தான் எனப் பொருள் கொண்டு, பதினாறு என்னும் குறிக்கோளை அடையத் தவங்கூட இருந்தவர்கள் உண்டு. பதினாறு பேறுகளைத்தான் பெறச் சொன்னார்கள் பெரியோர், பதினாறு பேர்களை அல்ல.

படித்தோர் பாமரர்க்கு விளக்கிட வேண்டும்—பக்கத்து வீட்டார் இதுபற்றிப் பேசித் தெளிவடைய வேண்டும். அரசு இதில் அக்கறை எடுத்திருக்கிறது. எல்லாமே அரசே கவனித்துக் கொள்ளும் என்று இல்லாமல், அவரவரும் தங்கள் கடமையை பிறருக்கு எடுத்துச் சொல்வதன் மூலமும், சொன்னதைத் தாங்களும் செயலில் காட்டுவதன் மூலமும் நாட்டுக்கு நன்மை செய்திட வேண்டும். மிகப் பொறுப்புமிக்க பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இந்தத் துறை அதிகாரிகள் மிக்க நேர்மையுடனும், தொண்டாற்றும் தூய உள்ளத்துடனும் இந்தப் பிரச்சாரத்தைச் செய்து வெற்றி கண்டிட வேண்டும். வெறும் ஏட்டுக் கணக்கு மட்டும் காட்டினால் போதாது. எடுத்த காரியத்தில் ஒழுங்கான முன்னேற்றத்தைக் கண் எதிரே காண முனைந்திட வேண்டும்.

ஆக்கப்பூர்வ பணி

படித்த ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் அதிகம் சொல்லத் தேவையில்லை. பட்டிக் காட்டில் வாழ்வோர், பாமரர், படிப்பறிவு எட்டிப் பார்க்காத பகுதிகளில் உழல்வோர் இவர்களிடத்தில் எல்லாம் இந்தச் சமூகப் பணியை விரைந்து செய்திடல் வேண்டும். அம்மை, காலரா போன்ற தொத்து நோய்களைப் பரவாமல் தடுக்க அதிகாரிகள் எப்படி முடுக்கி விடப்படுகிறார்களோ, அதுபோல இந்திய நாடு முழுமையும் எல்லாப் பகுதிகளிலும் குடும்ப நலத்திட்டப் பிரச்சாரப் பணி தீவிரப்படுத்தப்பட வேண்டும். இது அழிவு வேலையல்ல ;ஆக்கப் பூர்வமான பணி.

"திட்டமிட்ட குடும்பம்
தெவிட்டாத இன்பம்"

"அளவோடு பெற்று
வளமோடு வாழ்க"

"நாம் இருவர்—
நாம் பெறுவதும் இருவர்"

இவை தனித்தனி குடும்பங்களுக்கான அறிவுரை மட்டுமல்ல; நாளைய நாட்டின் ஒளி மிகுந்த வருங்காலத்திற்கு வழிகாட்டும் தத்துவமுமாகும்.

அரசின் சார்பில் நடைபெறும் விழாக்களில் மட்டுமல்லாமல் நாள்தோறும் இந்தப் பிரச்சாரத்தை அனைவரும் செய்திடல் வேண்டும். ஏனெனில், இது நாள்தோறும் நினைவுபடுத்திட வேண்டிய விவகாரம். ஏடுகளில், இதழ் நடத்துவோர் அவர்களாகவே இதுபற்றிய எடுப்பான விளம்பரங்களைச் செய்யலாம். கட்டணத்திற்காக அன்றி கடமைக்காகச் செய்யப்பட வேண்டிய விளம்பரம் இது என்பதால், வாரஞ்லியில் ஒவ்வொரு நாளும் இரண்டு தடவைக்குக் குறையாமல்மிகச் சுருக்கமாக நாலைந்து வரிகளில் விளம்பரம் செய்யலாம். அனைத்துக்கும் குடும்பநலத் திட்டத் துறையை எதிர்பார்க்காமல் ஆர்வமுடையோர் அனைவரும் முன்வந்து செய்திட வேண்டிய சிறந்த செயல் இது என்பதை எடுத்துக் கூறுவது என் கடமையாகும்.

இந்தத் திட்டத்தின் வெற்றியே நாட்டின் வெற்றியாகும். ஒவ்வொரு தனி மனிதனுடைய வாழ்க்கையின் வெற்றியுமாகும். வெற்றிமேல் வெற்றி குவித்திட இந்த வெற்றியே அடிப்படையுமாகும். அதனைத் தெளிந்து செயலாற்ற அனைவரையும் வேண்டுகிறேன்.

✿ ✿

எப்போது தெரியுமா?

ஆற்றல்மிகு பாரதிக்கும் அவர் தாசர்க்கும் விழா எடுப்போம்
விழா எடுக்கும் வேளையிலே...அவர்தம்
விழாக் கருத்தைச் செவிமடுப்போம்.
கண்கள் விற்றுச் சித்திரம் வாங்குவதோ
எனக்கேட்ட பாரதிக்குத் தாசன்
பெண்கள் கொய்யாப்பழக் கூட்டமென்றுரைத்தான்.
"தனித்துக் கிடந்திடும் லாயம்—அதில்
தள்ளியடைக்கப்படும் குதிரைக்கும்
கனைத்திட உத்திரவுண்டு—வீட்டில்
காரிகை நாணவும் அஞ்சவும் வேண்டுமோ?"

எனக் கேட்டான்...

"காதல் அடைதல் உயிர் இயற்கை—அது
கட்டில் அடங்கும் தன்மையதோ? அடி
கோதை தொடங்கடி! என்று சொன்னன்—இன்பம்
கொள்ளை! கொள்ளை! கொள்ளை! மாந்தோப்பில்!"

என்று மகிழ்ந்தவன்

"காதலுக்கு வழிவைத்து கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம் இதிலென்ன குற்றம்"

எனச் சொன்னன்

எப்போது தெரியுமா?
இப்போது தானே நாம்

குடும்பக்கட்டுப்பாடென்று கூறி
குசேலரைப் போல் ஆகாதீர் எனப்
பிரச்சாரம் புரிகின்றோம்
பேரரசின் சார்பில்!...

பெருங்கவிஞன், பிள்ளைக் கட்டுப்பாடு தேவையென
மூப்பதாண்டுக் காலத்திற்கு முன்பாக
முன்னேற்றக் கருத்துரைத்தான்...
நாலைந்து பிள்ளைக்குத் தந்தையான ஒருவன்
நடுநடுங்கித் தின்னையிலே படுத்துக் கொண்டான்.
நங்கையவள்—அவன் மனைவி வருகின்றாள்—இங்கு
கங்கையைப்போல் பிரவாகம் காட்டுகின்ற கவிஞன் நடை
கேளுங்கள்!

"அருமனைவி என்னிடத்தில் மெதுவாக வந்தாள்
அயர்ந்தீரோ என்றுரைத்தாள்; மலர்க்கரத்தால் தொட்டாள்
'தெருவினிலே பனி' என்றாள்; ஆமென்று சொன்னேன்
தெரிந்து கொண்டேன் அவள் உள்ளம் வார்த்தையென்ன
தேவை!

பத்துமாதம் செல்லப் பகற்போதில் ஓர்நாள்
பட்டகடன் காரர் வந்து படுத்துகின்ற நேரம்
சித்தமெல்லாம் மூத்தபெண் சுரநோயை எண்ணித்
திடுக்கிடுங்கால் ஒரு கிழவி என்னிடத்தில் வந்து
"முத்தாலம்மை வைத்த கிருபையினால் நல்ல
முகூர்த்தத்தில் உன் மனைவி பிள்ளை பெற்றாள் என்றாள்.
தொத்துநோய், ஏழ்மை, கடன்காரர் தொல்லை
தொடர்ந்தடிக்கும் சூறையிலே பிள்ளையோ பிள்ளை!"

அந்தப்
பாரதிதாசன்;
பெண்ணைப் பெருமை செய்தான்.
மண்ணைப்போல் மிதிபடும் மானிடரைப் பார்த்து
"உன்னை விற்காதே!" என்றான்.

[புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் 80-வது பிறந்த நாளையொட்டி புதுவையில் 29-4-71-ல் முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையில் கவியரங்கு ஒன்று நடைபெற்றது. அப்பொழுது பெண்ணின் பெருமை—குடும்ப நலத்திட்டம் பற்றி முதல்வர் அவர்கள் வடித்துத் தந்த எழில்மிகு வரிகள்]

❀ ❀

குடும்பங்களில் பெருகவேண்டியது நல்வாழ்வு

எத்தனைத் திட்டங்களைத் தீட்டித் தந்தாலும், எவ்வளவு மருத்துவ மனைகளைத் திறந்தாலும், வைத்திய வசதி வாய்ப்புக்களைத் தந்தாலும் அந்தத் திட்டங்களின் பயன், பங்கீடு போடுவதைப் பொறுத்தே இருக்கிறது.

பதினாறு பண்டங்களை 8 பேருக்குப் பங்கிடும்போது ஆளுக்கு 2 பண்டம் கிடைக்கிறது. அதே 16 பண்டங்களை 32 பேருக்குப் பங்கிட்டால் ஆளுக்குப் பாதிப் பகுதிதான் கிடைக்கும்.

ஒரு பக்கத்தில் திட்டங்களுக்காகக் கோடி கோடியாகச் செலவழித்துக்கொண்டே இருக்க, இன்னொரு புறத்தில் உணவு உற்பத்தியை மிஞ்சுகிற வகையில், தொழில் உற்பத்தியை மிஞ்சுகிற வகையில், மனித உற்பத்தியின் வேகம் பெருகிக்கொண்டே இருச்குமானால், திட்டங்களின் பயனை அனைவரும் சரிசமமாகப் பங்கிட்டு அனுபவிக்க முடியாது.

பணமாகத் தந்து, பல திட்டங்களை நிறைவேற்ற, உங்களுடைய வள்ளல் தன்மை மூலம் அரசுக்கு உதவி செய்வதைவிட, அரசின் திட்டங்களை அதிகமான பேருக்குப் பகிர்ந்தளிக்க முடியாத அளவிற்கு, அதிகமான பேர், அதற்குப் பங்கிற்கு வருகிற நிலையிலிருந்து மாற்றம் காணும் வகையில் நீங்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும். 'அளவோடு பெறுங்கள்; அப்போதுதான் வளமோடு வாழ முடியும்'.

மக்கள்தொகைப் பெருக்கம் மேலும் மேலும் அதிகமாகிக் கொண்டே போனால் நாடு தாங்காது.

நான் முன்பொருமுறை 'இந்தியா என்பது கடலில் மிதக்கிற ஒரு தெப்பமாக இருந்தால், மக்கள் தொகையினைத் தாங்க முடியாமல் இந்நேரம் கடலில் அந்தத் தெப்பம் மூழ்கிப் போயிருக்கும்' என்று குறிப்பிட்டேன்.

அதுபோல் மக்கள் தொகைப் பெருகிக்கொண்டிருக்கிறது. கேட்டால், 'நான் என்ன செய்ய, ஆண்டவன் அளிக்கிறான்,' என்று பழியை ஆண்டவன் மீது போடுகிறார்கள். ஆண்டவன்

வந்து சேரில் அதற்கு நான் காரணமல்ல என்று வாய் திறந்து சொல்லமாட்டான் என்ற நம்பிக்கை காரணமாக, அவர்கள் அவ்விதம் கூறுகிறார்கள் என நினைக்கிறேன்.

குடும்பங்களில் பெருக வேண்டியது நல்வாழ்வு!
குடும்பங்களில் பெருக வேண்டியது வளம்!
குடும்பங்களில் பெருக வேண்டியது அறிவாற்றல்!
குடும்பங்களில் பெருக வேண்டியது விவேகம்!
குடும்பங்களில் பெருக வேண்டியது விஞ்ஞானம்,
புதுமை!
குடும்பங்களில் பெருக வேண்டியது
மற்றவர்களுக்குப் பணியாற்ற
வேண்டும் என்கிற அருங்குணம்!

ஆனால் இன்று குடும்பங்களில் பெருகிக் கொண்டிருப்பது என்ன என்பது அவரவர்களுக்குத் தெரியும். அதைக் குறைத்துக்கொண்டு அரசோடு மக்கள் ஒத்துழைக்க வேண்டும்.

இந்த அரசு எல்லா வகையிலும் கிராம மக்களுடைய நல் வாழ்வை மையமாக வைத்து, திட்டங்களைத் தீட்டி, அவர்களுடைய எதிர்காலத்திற்காகப் பாடுபட்டு வருகிறது. அதற்காக ஆற்றப்படுகிற பணிகள் அத்தனைக்கும் அனைவரும் ஒத்துழைப்புத் தரவேண்டும்.

* *

மணமக்கள்
எடுக்க வேண்டிய சபதம்

குடும்பநலப் பிரச்சாரம் ஆளுங்கட்சியாக இருக்கின்ற நாங்கள், ஆளுகின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்ட இந்த காலத்திலேயிருந்து மாத்திரமல்ல, அறிவியக்கம் நாட்டிலே பரவிட வேண்டும் என்ற முறையில் நாங்கள் பிரச்சாரத்திலே ஈடுபட்டிருந்த அந்தக் காலந்தொட்டு, கடந்த 30 அல்லது 40 ஆண்டுகாலமாக அறிவியக்கக் கொள்கைகளிலே ஒன்றாக இந்தக் கொள்கையை எடுத்துச் சொல்லி வருகிறோம். பிள்ளைகளை அதிகம் பெறுவதால் வசதி வாய்ப்புகள் அந்தக் குடும்பங்களிலே அற்றுப் போய்விடுகின்றன என்ற தொல்லை மாத்திரமல்லாமல், நல்ல வலிவோடும்—பொலிவோடும்—வளத்தோடும் —வல்லமையோடும் அந்தக்குழந்தைகள் வளரமுடியாது. அவைகளுக்கேற்ற சத்துணவை அளித்திட வாய்ப்புகள் இல்லாமல் போய்விடும் என்ற இந்தக் காரணங்களைக் காட்டியும், இல்வாழ்வு மேற்கொண்ட கணவனும், மனைவியும் தங்களுடைய இல்வாழ்க்கையிலே பெரும்பகுதி குழந்தைகளை வளர்ப்பதற்கே செலவிடவேண்டிய அவசியம் ஏற்பட்டு விடும் என்கின்ற காரணத்தினால், இல்வாழ்க்கை இன்பத்தை அவர்கள் உய்த்துணர முடியாது என்பதனை அடிப்படையாகக் கொண்டு நீண்ட நெடுங்காலமாக அறிவியக்கக் கருத்துக்களிலே ஒன்றாக இதை எடுத்துச் சொல்லி வருகின்றோம்.

தஞ்சையும் தீவிர இயக்கமும்

மாநில, மத்திய அரசுகளும் கடந்த பல ஆண்டு காலமாக இந்தக் கொள்கையை மக்களிடத்திலே பரப்பிவருகிறது என்றாலும், மெல்ல மெல்லத்தான் இந்தக் கருத்து மக்கள் உள்ளத்திலே பதியத்தொடங்கி இன்றைக்கு, இனிமேல் பிரச்சாரம் அதிகமாகத் தேவையில்லை என்ற அளவுக்குக் கூட குடும்பநலத் திட்டத்தை மக்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராகிவிட்ட ஒரு நிலைமை உருவாகியிருக்கின்றது. தஞ்சை மாவட்டத்திற்குச் சென்றிருந்தேன். தஞ்சை மாவட்டத்தில் 15,000-க்கு மேற்பட்டவர்கள் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு, அறுவை சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற கணக்கை மாவட்ட ஆட்சித்தலைவர் என்னிடத்தில் காட்டினர்.

நம்முடைய நண்பர் இராமச்சந்திரன் அவர்கள் தென் ஆர்க் காடு மாவட்டத்திலேதான் நாங்கள் அதிகமான அளவுக்கு அறுவைசிகிச்சை செய்து கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். அங்குதான் அதிகமாக இது தேவைப் பட்டிருக்கிறது என்பது இதிலிருந்து எனக்கு நன்றாகப் புரி கிறது! தஞ்சை மாவட்டத்திலே உள்ளவர்கள் ஏற்கனவே கொஞ்சம் ஜாக்கிரதையாக இருந்த காரணத்தினால் அந்த அளவுக்கு இந்த எண்ணிக்கை வளராமல் இருந்திருக்கக் கூடும்! நான் திருவாரூருக்கு அருகாமையிலுள்ள விளமல் என்ற ஒரு கிராமத்திற்கு அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்பட்டேன். அறுவைசிகிச்சைக்கு வருகின்ற வர்களுக்கான வாய்ப்பு வசதிகள் அளிக்கப்பட்டு, அவர்கள் எந்த முறையில் நடத்தப்படுகிறார்கள், எவ்வளவு சௌகரியங் கள் செய்து கொடுக்கப்படுகின்றன என்ற விவரங்களையெல் லாம் மாவட்ட ஆட்சித்தலைவரும் குடும்பநல அதிகாரிகளும் என்னிடத்தில் விளக்கிச் சொன்னார்கள்.

அங்கிருக்கின்ற ஒரு பஞ்சாயத்து யூனியன் கட்டிடத்தில் அவர்களுக்கு வசதியான இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஏற் கனவே அறுவை சிகிச்சை செய்துகொண்டால் உடனடியாக அவர்கள் வீட்டுக்கு அனுப்பப்படுவார்கள். காலையிலே அறுவை சிகிச்சை முடிந்து, மாலையிலே அவர்கள் வீட்டுக்கு அனுப்பப் படுகிற காரணத்தால் மருத்துவர்கள்—அறுவை சிகிச்சை செய்த டாக்டர்கள் சொன்ன அறிவுரைப்படி அவர்கள் நடந்து கொள்ளாமல், அறுவை செய்த இடத்திலே வேறுவித தொந் தரவுகள் ஏற்பட்டு, அதன் காரணமாக அவர்களைப் பார்க்கின்ற வர்கள், இந்த முறையை மேற்கொண்டால் நமக்கும் இந்தத் தொல்லைவரும் என்ற அச்சத்திற்கு ஆட்படுகின்ற சூழ்நிலை இருந்தது. அந்த அச்சம் போக்கப்படுகிற அளவுக்கு, அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களை ஆறு நாட்கள் அங் கேயே தங்க வைத்து, அவர்களுடைய புண் நன்றாக ஆறிய பிறகு, வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். அது மாத்திரமல்ல, அவர்கள் வந்து சேருகிற நாளிலே அவர்களுடைய எடையை எடுத்துக் குறித்து கொள்ளுகிறார்கள். அவர்கள் அந்த இடத் தில் இருந்து விடைபெற்று செல்லுகிற நாளில் அவர்களுடைய எடையை எடுக்கும் பொழுது ஒரு ஐந்து பவுண்டு, ஆறு பவுண்டு அதிகமாகவே இருக்கின்றார்கள். அப்படிப்பட்டவர் களை என்னிடத்திலே அறிமுகப் படுத்தி அவர்களும் அதை மெத்த சந்தோஷத்தோடு என்னிடத்திலே ஒத்துக் கொண் டார்கள். ஆக இன்றைக்கு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு வெளியே செல்லுகின்றவர்கள், அவர்களே ஒரு பிரச் சாரக் கருவியாக மாறிவிடுகிறார்கள். அவர்களுக்கு ஏற்ற வசதி கள் எல்லாம் அந்த இடத்திலே செய்து கொடுக்கப்படுகின்றன. அதுமட்டுமல்ல, இப்படி அறுவை சிகிச்சை செய்து கொண்ட வர்களுடைய பெயர்களை எல்லாம் எழுதி, அவர்களுடைய எண் களையெல்லாம் எழுதி, அதை ஒவ்வொரு நாளும் சிட்டு குலுக்கு வதுபோல குலுக்குகிறார்கள். அப்படிக் குலுக்குவதிலே முதல்

பரிசு, இரண்டாவது பரிசு, மூன்றுவது பரிசு என்று பல பரிசுகளை ஏற்பாடு செய்து அதிலே முதல் பரிசுக்கு 'டிரான்ஸிஸ்டர்' ரேடியோவும், இரண்டாவது பரிசுக்குக் கையிலே கட்டிக் கொள்கிற சின்னக் கைக்கடியாரமும், மூன்றுவது பரிசாக நல்ல பெட்டிகளும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன!

இப்படியெல்லாம் எல்லா முறையிலும் மக்களை கவரத்தக்க வகையிலும், அவர்களுடைய அச்சம் போக்கப்படுகின்ற அளவிலும், ஐயப்பாடு நீக்கப்படுகின்ற நிலையிலும், இன்று இந்தக் குடும்ப நலத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் வெகு வேகமாக— தீவிரமாக அமுல் படுத்தப்பட்டு வருகிறது. அதிலும் குறிப்பாக மக்கள் நல்வாழ்வுத்துறை பொறுப்பினை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் ஏற்றுக்கொண்டு அவர்கள் இதிலே மிகுந்த தீவிர கவனம் செலுத்தி வருகின்றார்கள். அவர்கள் போகின்ற வேகம் இன்னும் கொஞ்ச நாளில் அமைச்சர்களையே கூட அப்படிப்பட்ட இடங்களுக்கு அவரே வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்று, இந்தச் சிகிச்சையை நீங்கள் செய்து கொள்ளவேண்டும் என்று வற்புறுத்துகின்ற அளவிற்கு போய்விடுவார் என்று எண்ணுகின்றேன்.

வேலைவாய்ப்பும் மக்கள்தொகையும்

பொதுவாக இன்றைக்கு பல வெளிநாடுகளில் வேலை இருக்கிறது. அதற்கு ஆட்கள் இல்லை. ஆனால் நம்முடைய நாட்டில் வேலை செய்ய ஆட்கள் இருக்கிறார்கள். வேலை இல்லை! இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். வேலை நிறைய இருக்கின்றது, ஆட்கள் தேவையென்று ஒரு காலத்திலே இத்தாலி நாட்டிலிருந்து, ஜெர்மன் நாட்டிலிருந்து இந்தியாவிற்கு அழைப்பு வந்தது. இந்தியாவிலிருந்து ஆட்களை அனுப்புவீர்களா என்று ஜெர்மானிய நாட்டுக்காரர்கள் இந்தியாவுக்கு எழுதி, அப்பொழுது இந்தியாவினுடைய பிரதமராக இருந்த மதிப்பு மிகுந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், அப்படி அனுப்புவது இந்திய நாட்டினுடைய கௌரவத்துக்கு இழுக்கு என்ற முறையில் அனுப்ப இயலாது என்று கூறிவிட்டார்கள். அதற்குப் பிறகு இத்தாலி நாட்டிலே இருந்த மக்கள், ஜெர்மானிய நாட்டுக்கு வேலைக்கு அழைக்கப்பட்டு அவர்கள் அங்கே சென்றார்கள். இன்றைக்கும் நாம் ஜெர்மானிய நாட்டுக்குச் சென்றால் இத்தாலிய நாட்டு மக்களை அதிகமாகக் காணலாம். அங்கே வேலை அதிகமிருக்கிறது. ஆனால் இங்கே நம்முடைய நாட்டில், நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல வேலை செய்வதற்கு ஆட்கள் நிறையப் பேர் இருக்கின்றோம். ஆனால் வேலை இல்லாமல் தவிக்கின்றோம். இந்த நிலைமையிலேயே, இதோடு மக்கள் பெருக்கத்தை நாம் கட்டுப்படுத்தாவிட்டால், இன்னும் இந்த மக்கள் பெருக்கம் தொடர்ந்து வளர்ந்து கொண்டே போகுமேயானால், இது எங்கே போய் முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நான் ஒன்றை உங்களுக்குச் சொல்வேன். இதைக் கூட எதிர்த்து, இன்றைக்கு மறைமுகமாக இதைத் தடுத்திட சில அரசியல் கட்சிக்காரர்கள் முனைந்திருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்குச் சொல்லாமல் இருக்க இயலாது. தஞ்சை மாவட்டத்தில் இந்த இயக்கம்—குடும்ப நலத்திட்ட இயக்கம்—வெகு தீவிரமாக நடைபெறுகிறது. ஆனால் அங்கே இருக்கிற சில அரசியல் கட்சிக்காரர்கள்—அரசியல் கட்சிக்காரர்கள் எனச் சொல்லுகிற நேரத்தில் தீவிரவாதம் பேசுகின்ற அரசியல் கட்சிக்காரர்கள்—ஏனென்றால் ஒவ்வொருவரும் தங்களைப் போட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டாம் என்பதற்காகச் சொல்லுகிறேன்; தீவிரவாதம் பேசுகிற அரசியல் கட்சிக்காரர்கள் இன்றைக்குத் தஞ்சை மாவட்டத்தில் இந்த இயக்கத்திற்கு எதிராகப் பிரச்சாரம் செய்கிறார்கள். அறுவைச் சிகிச்சைக்கு வந்து, சிகிச்சை பெற்று கிராமத்துக்குச் செல்லுகிறவர்களை இன்றைக்கு அடிக்கிறார்கள், உதைக்கிறார்கள். "நம்முடைய ஜனப் பெருக்கத்தைக் குறைத்து பிறகு ஊரிலே இருக்கிற மிராசுதாரர்கள் தன்னை அடக்கி ஒடுக்குவதற்காக இந்தச் சூழ்ச்சியைக் கையாளுகிறார்கள். ஆகவே விவசாயத் தொழிலாளிகளே ஏமாறுதீர்கள்!" என்றெல்லாம் பிரச்சாரம் செய்கிறார்கள். உண்மையிலேயே அவர்களுடைய எண்ணம் அதுவல்ல. இந்தியாவிலே ஜனத்தொகை அதிகமாகப்பெருகி, நாம் நிறைவேற்றுகின்ற திட்டங்களைப் பங்கிட்டுக் கொள்ள முடியாமல், திட்டங்களின் பயன்களைப் பகிர்ந்துகொள்ள முடியாமல் இந்தியாவிலே ஒரு நெருக்கடி ஏற்பட்டு, இங்கேயே உள்நாட்டுப் போர் நிகழுமேயானால், பக்கத்திலே இருக்கிற அவர்களது நண்பர்களை, இங்கே வா! வா! என்று அழைத்து உட்கார வைத்துக்கொள்ளலாம் என்கின்ற மறைமுகமான ஒரு சதித் திட்டத்தை இன்றைக்கு அவர்கள் கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இவைகளுக்கெல்லாம் இடமளிக்காத வகையிலே நம்முடைய நாட்டு மக்கள், அரசாங்கம் எடுத்துச் செய்கின்ற இந்த மிகப்பொறுப்பு வாய்ந்த காரியத்திற்கு—இந்தக் கடமைக்கு தங்களுடைய நல்ல ஒத்துழைப்பினை நல்கிட வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்க வேண்டிய உறுதி

திருமண நேரங்களில் பெண் வீட்டாரும், பிள்ளை வீட்டாரும் இதுவரையிலே என்ன பேசிக் கொள்கிறோம்? திருமணம் செய்து கொடுத்தால் எவ்வளவு நகை போடுவீர்கள்? எவ்வளவு நிலம் எழுதி வைப்பீர்கள்? கார் உண்டா? மாப்பிள்ளைக்கு கோட்டு தைத்து கொடுப்பீர்களா? என்றெல்லாம் பேசிக் கொள்கிறோம். இப்படி பேரம் பேசுவதை விட்டு விட்டு, இனிமேல் காதலிக்கின்ற பெண்ணும், பிள்ளையும் திருமணத்துக்கு முன்பு அவர்கள் உறுதியெடுத்துக் கொள்ள வேண்டியது, திருமணம் செய்து கொண்டால் இரண்டு

பிள்ளைகளுக்கு மேல் பெறுவதில்லை என்று உறுதியளிப் பீர்களா? என்று இரண்டு பேர்களும் ஒரு சபதம் செய்து கொள்ளுவார்களேயானால் அவர்களுடைய வாழ்க்கை உள்ள படியே நிம்மதியாக இருக்கும். அப்படிப்பட்ட சபதம் கொள் ளாதவர்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதை எடுத் துச்சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆகவே வாழ்க்கைத் துணைவர்களாக ஆவதற்கு முன்பே, தாங்கள் வாழ்க்கைத் துணைவர்களானால் எப்படி எப்படி வாழ்வோம் என்று நாம் எவ்வளவோ திட்டம் போடுகிறோம்.

வேலையில் இருக்கிற ஒரு மணமகன், வேலையிலே இருக்கிற ஒரு மணமகளைத் திருமணம் செய்து கொண்டால், இரண்டு பேருக்கும் கிடைக்கின்ற சம்பளத்தை வைத்துக் குடும்பத்தை எப்படி நடத்தலாம் என்று திட்டம் போடுகிறோம்! நாம் எந்த ஊரிலே வேலையிலிருந்தால் நம்முடைய உற்றார் உறவினரோடு வாழ முடியும்—திட்டம் போடுகிறோம்! குடும்பத்தை நடத்துவ தற்கு எத்தனை ரூபாய் வாடகையிலே வீடு இருக்கவேண்டும்— திட்டம் போடுகிறோம்! இந்த வீடு வாடகை வீடாக இருப்பதா அல்லது முதலிலே கொஞ்சம் முன்பணத்தைக் கட்டிவிட்டு மாதாமாதம் சம்பளத்திலே கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டி பிறகு நிரந்தரமாக நமக்கே உரியதாக்கி கொள்வதா—திட்டம் போடுகிறோம்! இவ்வளவு திட்டம் வாழ்க்கையிலே போடுகிற நேரத்தில் நம்முடைய வருங்காலத்திலே, நம்முடைய வாரிசு களாக இருக்க எத்தனை குழந்தைகள் தேவை என்கின்ற அந்தத் திட்டத்தையும் வாழ்க்கைத்துணைவர்களாக ஆகிறவர் கள் போட்டுக் கொள்வார்களேயானால், நாட்டின் பொருளா தாரத்துறையிலும், சமுதாயத்துறையிலும் பெரியதோர் மாற் றத்தை நாம் நிச்சயமாகக் காண முடியும். ஆகவே, இந்தத் திட்டத்தை மிக முக்கியமான திட்டமாகக் கருதிட வேண்டும்.

சிறுதுளி பெருவெள்ளம்

இன்றைக்கு எவ்வளவோ காரியங்களைச் செய்கிறோம். எத்தனையோ பிரச்னைகளை ஏழை எளிய மக்கள்—சாதாரண மக்கள், நடுத்தர மக்கள், மத்தியதர வகுப்பிலே உள்ள மக்கள், பாட்டாளி மக்கள் என்கின்ற அந்த அடிப்படையில் காரியங் களை நிறைவேற்றுவதற்காக அரசாங்கத்தின் சார்பில் நாம் துடிக்கின்றோம். அதற்கானத் திட்டங்களைத் தீட்டுகிறோம். செயல் முறைகளிலே ஈடுபடுகிறோம். ஆனால் இவ்வளவும், பத்துப்பேருக்குத் தீட்டப்பட்ட திட்டம், நாளடைவில் பதி னைந்து பேருக்கு, இருபது பேருக்கு என்று பிரிக்கப்படுமே யானால் பகிர்ந்தளிக்கப்படுகிற திட்டத்தினுடைய அளவு நிச்ச யமாகக் குறைந்து விடும் என்பதை மனதிலே கொண்டு, ஒவ் வொருவரும் இது ஏதோ பொதுவாகச் சொல்லப்படுகின்ற விஷயம் என்று எண்ணுமல், தனி மனிதன்தான் சமுதாயம், சிறு துளி பெருவெள்ளம் என்பதைப்போல் ஒவ்வொரு தனி மனிதனும் தன்னுடைய வாழ்க்கையிலே திட்டம் போட்டு

நடந்துகொள்ள முற்படுவானேயானால், சமுதாயம் அந்தத் திட்டத்தைப் போட்டதாக அர்த்தம். சமுதாயம் அப்படி ஒரு திட்டத்தைப் போட்டுக் கொள்ளுகிறது என்றால், நாடு முற்போக்கான நிலைமையில் அடி எடுத்து வைப்பதாக அர்த்தம். பொருளாதாரத் துறையிலே ஏற்றம் பெற்றதாக அர்த்தம் அந்த அளவில் ஒவ்வொருவரும் திட்டம் போட்டு வாழ்க்கையை நடத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தை குடும்ப நலத் திட்டம்—குடும்பத் திட்டம்—குடும்பக் கட்டுப்பாடு திட்டம் என்றெல்லாம் நாம் சொல்லுகிறோம்.

ஏற்கனவே குடும்பக் கட்டுப்பாடு, குடும்பக் கட்டுப்பாடு என்று இது சொல்லப்பட்டது. இன்றைக்குக் குடும்ப நலத் திட்டம் என்று இதை அழைக்கின்றோம். குடும்பக் கட்டுப்பாடு என்றால் அது எல்லாவற்றிற்கும் பொருந்தும். குடும்பத்திலே உள்ளவர்கள் கட்டுப்பாடாக இருக்க வேண்டும். அடுத்த வீட்டில் போய் சண்டை போடக்கூடாது. எதிர்த்த வீட்டில் ஏதும் நடந்தால் அதைப்பற்றிக் கவலைப்படக்கூடாது. நாம் இங்கே கட்டுப்பாடாக இருக்க வேண்டும் என்கின்ற அந்த அளவிலே கூட அந்தக் கட்டுப்பாட்டுக்குப் பொருள் பொருந்தும். ஆகவேதான் இதிலே கட்டுப்பாடு தேவையில்லை என்று இன்று நாம் முடிவெடுத்து, குடும்பம் நலமாக இருப்பதற்கான திட்டம் என்ற அளவிலே இந்தத் திட்டத்தின் பெயரை மாற்றியமைத்ததின் மூலமாக—பெயர் மாற்றத்திலே நமக்குள்ள ஆசையைக் காட்டவில்லை—இந்தப் பெயர் மாற்றத்திலே இருக்கின்ற உண்மையான பொருளை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக இந்தப் பெயர் மாற்றப்பட்டிருக்கிறது. இன்றைக்குத் தமிழ்நாட்டிலே, ஒவ்வொரு மாவட்டத்திலும் போட்டி போட்டுக் கொண்டு இந்தக் காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அது நல்ல வகையில் வளருவதற்கு சென்னை மாநகராட்சி மன்றமும் எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருப்பதுபற்றி நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

* *

இந்தியாவிலேயே முன் நிற்கிறோம்

இன்று நல்லறம் நடத்தவிருக்கின்ற அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் இல்லங்கள் சின்னச் சின்ன வீடுகள். அதிலே நீங்கள் பிள்ளைகளை அதிகமாகப் பெற்றுவிடாமல், வீட்டு நெருக்கடியை — அதன் இடத்தை உணர்ந்து குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டத்தை அனுசரித்து, சுகாதாரமாக இருக்க, தூய்மையாக இருக்க, நல்ல புழுக்கத்திற்கு வசதியாக அந்த வீட்டில் எத்தனை குழந்தைகள் நடமாடினால் தாங்கும் என்பதை எண்ணிப்பார்த்து உங்களுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அரசின் திட்டங்கள் ஒழுங்காகச் செயல்பட முடியும்.

எப்படி வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் ஆகியவற்றில் தமிழ் நாடு மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டிக் கொண்டிருக்கிறதோ, அதைப்போல குடும்பக் கட்டுப்பாடு வெற்றிகரமாக நடைபெறுவதிலும், இன்று இந்தியாவிலேயே தமிழ் நாடு முன் நிற்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்து, அதிலே மேலும் மேலும் நல்ல வெற்றிகளை நாம் எய்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* *

கட்டாயமில்லை:
கடமையுணர்வு தேவை

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் போற்றத்தகுந்த பல நிகழ்ச்சிகளை ஒரே இடத்திலே ஏற்பாடு செய்து, மாவட்ட மெங்கிலும் பரவலாக பல்லாயிரக் கணக்கான மக்கள் பயன் பெறத்தக்க காரியங்களுக்கான தொடக்க விழாவினை, இங்கே நடத்தியிருக்கின்ற பாங்கினை நான் எண்ணி, எண்ணி, மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். 12 உயர்நிலைப்பள்ளிகளுக்கான கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவும், ஊராட்சி ஒன்றிய 250 பள்ளிகளுக்கான அடிக்கல் நாட்டு விழாவும் நடை பெற்று இருக்கின்றது.

மற்றொரு பெரிய திட்டம்; இந்தியாவிலேயே எந்த மாநிலமும் சாதிக்காத திட்டமாகக் குடும்பக்கட்டுப்பாடு திட்டத் தில் 40,000-க்கு மேற்பட்டவர்களுக்கு 1971–72-ஆம் ஆண்டில் இந்த மாவட்டத்திலே, அறுவை சிகிச்சை நடை பெற்று அத்தனை பேரும் நல்ல பயன் பெற்றிருக்கின்றார்கள் என்பது பாராட்டத்தகுந்த ஒன்றாகும். அந்த 40,000-க்கு மேற் பட்டவர்களில் நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. ஏ. நம்பியாரும் ஒருவர் என்பதை அறிகிற நேரத்தில் நான் மிகுந்த மகிழ்ச்சி யடைகின்றேன். அதைச் சொல்லி அவருக்கு மாவட்ட மக்களின் சார்பாக ஆடை களை வழங்கிய சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர் கள், அவர்களிலே ஒருவரா என்பது எனக்குத்தெரியாது. இதுவரையிலே இல்லாவிட்டால் இனிமேல் அந்த 40,000 பட்டியலில் இணைந்து கொள்ளுவார் என்று நான் எதிர் பார்க்கின்றேன்.

தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித்தலைவர் முயற்சியால் சட்டமன்ற உறுப்பினர்கள், ஆங்காங்கு இருக்கின்ற ஊராட்சித் தலைவர்கள், அலுவலர்கள் ஆகியோருடைய உதவியால், ஆசிரியர்களுடைய துணையால், கிராம அதிகாரிகளுடைய உதவியால், பொது மக்களுடைய ஒத்துழைப்பால், 40,000 பேருக்கு கருத்தடை செய்யப்பட்டிருக்கிறது. 'பரவாயில்லை, 40,000 பேருக்குத்தானே கருத்தடை, அவர்களுக்கும் சேர்த்து, கருத்தடை செய்து கொள்ளாமலிருக்கிற நாம் குழந்தைகள்

உற்பத்தி செய்வோம், என்று ஆரம்பித்து விட்டால், இது எங்கே போய் முடியும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். குடும்பக்கட்டுப்பாடு என்பது ஏதோ ஒருவார்த்தை அலங்காரச் சொல் அல்ல. குடும்பக் கட்டுப்பாடு குடும்பநலத்தின் அடிப்படையிலே எழுந்து, அது ஊர் நலம், மாநில நலம், இந்தியாவின் நலம் என்கிற அளவிற்கு விரிவடைகிறது. அதை யாரும் மறந்து விடக்கூடாது. நம்முடைய மக்கள் தொகை பெருக்கம் வெகு வேகமாக வளர்ந்து கொண்டு போகிறது. நாம் வேறு எதிலும் பெரிய முயற்சி எடுத்துக் கொள்ளாவிட்டாலும், இதிலே சிரமப்பட்டு பெரிய முயற்சி எடுத்துக் கொண்டு, எதைப் பெருக்கினாலும் பெருக்காவிட்டாலும், இதைப் பெருக்கிக் கொண்டு இருக்கிறோம்!

இதை எடுத்துச் சொன்னால், இந்தக் கடமை அனைவருக்கும் இருக்கின்றது என்பதை புரியும்படி கூறினால், சிலபேருக்கு கோபம் வருகிறது. கட்டாயப் படுத்துகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். கட்டாயப்படுத்துவதை ஆதரிக்கவில்லை. ஆனால் நான் கேட்பதெல்லாம் என் கட்டாயப்படுத்துகின்ற அளவுக்கு நாம் நடந்து கொள்ள வேண்டும். கட்டாயப்படுத்தாமலே கூட, நான் போய் அந்தக் காரியத்தைச் செய்கிறேன் என்கிற கடமை உணர்ச்சி ஒவ்வொருவருக்கும் வந்தாக வேண்டும். இது ஒரு பெரிய சமுதாயக்கடமை. மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டாயப்படுத்தினாலும், அல்லது அவர்களுக்குக் கீழே இருக்கின்ற அதிகாரிகள் கட்டாயப்படுத்தினாலும், பஞ்சாயத்து யூனியன்களிலே இருக்கின்ற தலைவர்கள் கட்டாயப்படுத்தினாலும், நான் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. கட்டாயப்படுத்துவது எந்தக் காரியமானாலும் தேவையில்லை. கட்டாயப்படுத்தினால் சரியில்லை. எனவே அந்த நிலையில்லாமல், நாம் அனைவரும் கடமையைச் செய்ய வேண்டும் என்கின்ற உணர்வு நம்முடைய உள்ளத்திலே உந்தி எழவேண்டும்.

* *

மதமாச்சரியங்களைக் கடந்தது குடும்ப நலத்திட்டம்

மிகச் சிறிய கிராமத்தில் தேவைகள் எவ்வளவு பெரிய அளவுக்கு இருக்கின்றன என்பதனை, இதுவரையிலே நிறைவேற்றப்பட்டுள்ள காரியங்களைத் தொகுத்துப் பார்த்தும், இன்னும் நிறைவேற்றப்பட வேண்டியவைகளை எண்ணிப் பார்த்தும், நம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது.

இந்த இனிய விழாவில் குடும்ப நலத்திற்கான கண்காட்சி, கருத்துக் காட்சியாக அமைக்கப்பெற்று அதனையும் பார்த்து, உணர்ந்து, இந்தப் பகுதியிலே உள்ள மக்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திலே வெற்றிகரமாக முன்னேறவேண்டும் என்ற உணர்வினை எழுப்பிடத்தக்க விதத்திலே, அதனையும் உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால் இந்தப் பகுதியிலே பெரும்பாலும் வாழுகின்ற மக்கள், பரணம்பட்டுப் பகுதியானாலும் அல்லது இந்த நரியம்பட்டு போன்ற பகுதியானாலும், இஸ்லாமியச் சகோதரர்கள்தான் பெரும்பாலும் வாழுகின்றார்கள் என்பதை நான் நன்றாக அறிகிறேன்.

குடும்பநலத் திட்டத்தைப் பற்றி இஸ்லாமியச் சகோதரர்களுக்கு அல்லது வேறு மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு எந்த அளவுக்கு நம்பிக்கை இருக்கிறது அல்லது அதிலே அவர்களுக்கு அக்கறை இருக்கிறது என்பதையெல்லாம் நான் விளக்கமாகச் சொல்ல வேண்டியதில்லை என்றே கருதுகின்றேன். சிறுபான்மையோராக இருந்தாலும், வேறு மதங்களைச் சார்ந்தோராக இருந்தாலும் இதிலே மதமாச்சரியங்களைக் கடந்து, எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டு இதை ஒரு நாட்டுப் பிரச்னையாக எல்லா மதத்திலே இருப்பவர்களும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இஸ்லாமியரும் குடும்பநலமும்

இந்தியாமீது பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு செய்த நேரத்தில், பாகிஸ்தானத்திலே இருப்பவர்கள் இஸ்லாமியர்களாயிற்றே; இந்தியாவில் இருக்கின்ற இஸ்லாமியர், பாகிஸ்தானத்திலே இருக்கின்ற இஸ்லாமியர் பக்கம்தான் இருக்க வேண்டும் என்கின்ற எண்ணம் எள்ளளவும் உள்ளத்திலே ஏற்படாமல் இந்தியா நம்முடைய நாடு என்ற உணர்ச்சியோடு, பாகிஸ்

தான் படைவீரர்களை எதிர்த்து நின்று, பாகிஸ்தான் நாட்டைப் புறங்காணுகின்ற அளவுக்கு அத்தகைய வியத்தகு வீரத்தைக் காட்டியவர்கள், இந்தியாவிலே உள்ள இஸ்லாமியப் பெருமக்கள் என்பதை நான் மிகுந்த நன்றி உணர்வோடு எடுத்துக் காட்டவும் விரும்புகின்றேன். எப்படிப் பாகிஸ்தானத்துப் படை எடுப்பு இந்தியாவின்மீது ஏற்பட்ட நேரத்திலே நீங்கள் மதத்தை ஒரு புறத்திலே ஒதுக்கி வைத்துவிட்டு, நாட்டை முன்னிறுத்திப் பாடுபட்டீர்களோ அதுபோல், ஏன், அந்தப் படைஎடுப்பைவிடப் பயங்கரமானது தான் இன்றைக்குக் குடும்பநிலை குலைவுற்று, குடும்பங்கள் பெருகி, மக்கள் தொகை அதிகமாகி, ஆண்டுதோறும் கோடிக் கணக்கான மக்கள் இந்தியாவில் பிறக்கிறார்கள். அவர்கள் தொகை அதிகமாகிக் கொண்டே வருகிறது என்றால், அது பாகிஸ்தான் படை எடுப்பைவிட—சீனப்படை எடுப்பைவிட—நமக்கு நாமே நாட்டிலே ஒரு பாதுகாப்பற்ற நிலையை உருவாக்கிக் கொள்கிறோம் என்ற நிலைமையிலே அதிகமானதாகும். ஆகவே படை எடுப்புக்களால் நம் நாடு தொல்லையுறுமல் பாதுகாப்பதிலே நாம் எவ்வளவு அக்கறை கொள்ளுகிறோமோ, அதைப்போலவே தான் நம்முடைய வீடுகளிலே ஆண்டுதோறும் குழந்தைகளுடைய 'பிறப்பு' என்கின்ற படை எடுப்புக்களால் நாடு சேதமுறுமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பெரும் பொறுப்பை, மதங்களைக் கடந்து, நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். அந்த வகையிலே எல்லோரும் சிந்தித்துச் செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்து மதக் கருத்து

இந்து மதத்திலேகூட, இந்தக் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வதை ஒரு காலத்தில் பாபகரமாகத்தான் பல பேரும் கருதினர்கள். இன்னுஞ் சொல்லப்போனால், இப்படிப்பட்ட முறைகள் கூடாதென்று உத்தமர் காந்தியடிகளே கூடச் சொன்னார்கள். குடும்பக் கட்டுப்பாட்டிற்குக் கருவிகளைப் பயன்படுத்தக்கூடாது—மனக் கட்டுப்பாடுதான் தேவை என்று மகாத்மா காந்தியடிகளேகூடச்சொன்னார்கள் என்றாலும், அந்தக் காந்தியடிகளுடைய வாரிசுகளாக வந்த பண்டித ஜவஹர்லால் நேருவோ, லால்பகதூர் சாஸ்திரியோ, இன்றைக்குப் பிரதமராக இருக்கின்ற இந்திரா காந்தி அம்மையாரோ அல்லது காந்தியடிகள் கொள்கைகள் பலவற்றை ஏற்றுக் கொண்டிருக்கின்ற—அவர்கள் தொண்டர்களாக இருந்த, பல ஆளுகின்ற பொறுப்பிலே உள்ளவர்களோ, யாரும் காந்தியடிகள் சொன்னதுதான் போதுமானது என்ற அளவுக்கு எடுத்துக்கொள்ளவில்லை.

இந்தியாவினுடைய மக்கள் பெருக்கத்தைக் குறைக்க வேண்டுமேயானால் சிகிச்சை முறைகளை நாம் மேற்கொண்டாக வேண்டும். நவீன முறைகளை—நவீன உத்திகளைப் பயன்

படுத்தியாக வேண்டும் என்ற நிலைமைக்குத்தான் இந்திய அரசும், மாநில அரசுகளும் இன்றைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டு அந்தக் காரியத்தை வேகமாகச் செய்து வருகின்றன.

எத்தனையோ காரியங்கள், இந்து மார்க்கத்திலே கூட ஒரு காலத்தில், "இவை பாபங்கள்" என்று கருதப்பட்டன. ஆனால் காளாவட்டத்தில் எவை பாபங்கள் என்று ஒதுக்கித் தள்ளப் பட்டு, அன்றைக்கு எவ்வளவுதான் எடுத்துச் சொன்னாலும், சொல்லுகிறவன் தூற்றப்பட்டு, எடுத்து முன் வைக்கிறவன் இகழப்பட்டு—எடுத்துச் சொல்லப்பட்ட கொள்கைகள் புறக்கணிக்கப்பட்டு, ஒரு மூலையிலே தூக்கி எறியப்பட்டாலும், இன்றைக்கு அதே இந்து மார்க்கத்திலே பல கொள்கைகளை ஏற்றுக்கொண்டு நாட்டின் நன்மைக்காக அவற்றைப் பயன் படுத்துகின்ற நிலைமைகளையெல்லாம் நாம் காணுகின்றோம். "குழந்தைகள் பிறக்கக்கூடாதென்று தடுப்பதா? அது நாம் செய்கிற காரியமா? ஆண்டவன் தருவதல்லவா? அதைப்போய் தடுத்தால் ஆண்டவனுக்கே செய்கிற துரோகமல்லவா?" என்று நம்முடைய பெரியோர்கள் எல்லாம் சொன்னார்கள். நகர்ப்புறங்களிலே, கொஞ்சம் நாகரிகத்தினுடைய வெளிச்சம் படுகின்ற இடங்களிலே கூட. அப்படிப்பட்ட பெரியோர்கள் இருந்தார்கள் என்றால், கிராமப்புறங்களிலே எவ்வளவு கடுமையாக இந்தக் கொள்கையை—குடும்பக் கட்டுப்பாடு தேவை என்ற கொள்கையை எதிர்த்திருப்பார்கள் என்பதை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும்.

மூட நம்பிக்கைகளிலிருந்தெல்லாம் விடுபட்டு, நாம் நாகரீக உலகிலே நடைபோட்டுக் கொண்டிருக்கின்றோம். ஆகவே நாட்டினுடைய பாதுகாப்பைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

உரிமைக்குரல்

இன்றைக்கு என்னதான் குடும்பநலத்திட்டத்தைப் பல் வேறு இடங்களிலும், பல்வேறு மாநிலங்களிலும்—நம்முடைய மாநிலத்திலே பல்வேறு மாவட்டங்களிலும், ஒரு மாவட்டத் திற்கு ஒரு மாவட்டம் போட்டி போட்டுக்கொண்டு நாம் இதை நிறைவேற்றினாலும்—வெற்றிகரமாக நிறைவேற்றினாலும்—ஏற்கனவே இருந்த மூன்று கோடி நம்மையும் மீறி இப்பொழுது நான்கு கோடி என்று மாறியிருக்கிறது! மூன்று கோடி, நான்கு கோடியாக மாறியிருக்கும்பொழுது, ஏன் நாடாளுமன்றத்திலே நம்முடைய மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறைய நேரிடும்; அதுதான் அதிகமாக ஆகியிருக்கிறதே என்று சிலர் எண்ணக்கூடும்; கேட்கக்கூடும். ஆனால் உயர்ந்த சதவிகிதத்தைப் பார்த்துத்தான் நாடாளுமன்றத்தில் அந்த எண்ணிக்கையை இன்றைக்கு வகுக்கின்றார்கள். அப்படிப் பார்த்தால் நம்முடைய சதவிகிதத்தில் ஏதோ ஒரு அரைப் புள்ளியோ,

ஒரு புள்ளியோ குறையுமேயானால், இந்த 39-க்கும் ஆபத்து வரக்கூடும். அதிலேகூட ஒன்றிரண்டு குறையக்கூடும். நம்முடைய தமிழ்நாட்டின் சார்பில் உறுப்பினர்கள் 41 பேர் இருந்தோம். இன்றைக்கு 41, 39 ஆகக் குறைந்ததற்குக் காரணம் இங்கே குடும்ப நலத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, மக்கள் தொகைக் குறைந்ததால், இரண்டு எண்ணிக்கைக் குறைந்தது. நாடாளுமன்றத்தில். மேலும் எண்ணிக்கைக் குறையுமோ என்ற அச்சம் நம்மையெல்லாம் இன்றைக்கு ஆட்டிக் கொண்டிருக்கிறது. அந்த அச்சம் போக்கப்படவேண்டும் என்பது மாத்திரமல்ல. ஏற்கனவே இருந்த 41 இடங்கள் நம்முடைய தமிழ் நாட்டிற்கு வேண்டுமென்று, தமிழ்நாட்டு அரசாங்கத்தின் சார்பில் தில்லி சர்க்காரை நாம் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம். 1951—52-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையிலேதான் நாடாளுமன்றத்திலே உறுப்பினர்கள் தொகை வகுக்கப்பட வேண்டுமென்று நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதற்கு மத்திய சர்க்கார் இணங்கிடவேண்டும். தமிழ்நாட்டு மக்களுடைய இந்த ஒருமித்த குரலுக்கு அவர்கள் செவிசாய்க்க வேண்டும் என்று நான் எடுத்துச் சொல்வேன். நம்முடைய எண்ணிக்கையைக் குறையாமல் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்கின்ற உரிமைக்குரல் ஒருபுறத்திலே இருக்கிற அதே நேரத்தில், நாம் குடும்பநல வாழ்விலும்—குடும்பநலத் திட்டத்திலும் மேலும் வெற்றிகரமாகச் செல்ல வேண்டும் என்பதைத் தயவு செய்து யாரும் மறந்துவிடக் கூடாது.

வீட்டு நிம்மதி

வீடுதான் நாட்டினுடைய ஆரம்பத் தளமாகும். வீடுகளில் நல்விளக்கு எரிந்து—வீடுகள் பிரகாசமாக இருந்து—வீடுகளில் நிம்மதி இருந்து—வீட்டிலே இருப்பவர்கள் மகிழ்ச்சியிலே திளைத்தால்தான், அது நாட்டில் எதிரொலிக்கும். இன்றைக்கு வீடுகள் அவ்வாறில்லை. நல்ல தொழிலே இருந்தாலும், வசதி வாய்ப்புக்கள் அந்தக் குடும்பத்திற்கு இருந்தாலும், அளவோடு குழந்தைகள் அந்தக் குடும்பத்திலே இருந்தால்தான்—இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் இருந்தால்தான், தாய் தகப்பனுக்கு நிம்மதி இருக்கும் என்பதை ஒவ்வொரு குடும்பத்திலும் நாம் காணமுடியும். அந்த நிம்மதி ஏற்படவேண்டுமேயானால் குடும்பம் அளவானதாக இருக்க வேண்டும். வசதியும் வாய்ப்பும் உள்ள குடும்பத்திலேயே இரண்டு மூன்று குழந்தைகளுக்கு மேல் இருத்தல் ஆகாது என்கின்ற சலிப்பு ஏற்பட்டு விடுகின்ற நேரத்தில், சாதாரணமான குடும்பங்கள்—சாமான்ய மக்களுடைய குடும்பங்கள்—ஏழை எளியவர்களுடைய குடும்பங்கள் ஆகியவற்றில் மக்கள் தொகை பெருகிக்கொண்டேயிருந்தால்—ஆண்டுதோறும் குழந்தைகள் அந்த இல்லத்திலே பிறந்துகொண்டே இருந்தால், முதல் குழந்தை பிறந்த நேரத்தில் அதற்கு நல்ல கவனிப்பிருக்கும்! அடுத்த குழந்தை பிறந்த

பிறகு முதல் குழந்தை கவனிப்பாரற்றுப் போகும்! அதற் கடுத்தகுழந்தை பிறந்தால் இரண்டாவது குழந்தை கவனிப்பா ரற்றுப்போகும். நாலந்து குழந்தைகளானல் நாலந்து குழந் தைகளும் கவனிப்பாரற்றுப்போகும்.

ஏழை வீட்டில்—எளியவன் வீட்டில்—சாதாரண வருவாய் உள்ளவனுடைய வீட்டில்—ஒரு குழந்தை, இரண்டு குழந்தை என்ருல், இரண்டையும் ஒழுங்காகப் படிக்க வைக்கமுடியும். இரண்டுக்கும் ஒழுங்காகச் சத்துணவு வழங்க முடியும். இரண் டையும் பட்டினி இல்லாமல் பாதுகாக்க முடியும். அவை பெருகிவிடுமேயானல் குழந்தைகளும் அரைப்பட்டினி, தாயா ரும் தகப்பனரும் முழுப்பட்டினி என்கின்ற அளவுக்குத்தான் குடும்பங்கள் நடைபெறும். ஆகவே இந்தக் குடும்பக் கட்டுப் பாட்டில் எந்தவிதமான பாபமும் கிடையாது.

அண்ணு சொன்னர்

அறிஞர் அண்ணு அவர்கள், குடும்பக்கட்டுப்பாடு விழா ஒன்றில் பேசுகிற நேரத்தில் மிக அழகாக ஒன்றைச் சொன்னர் கள். 'ஆண்டவனேகூடக் குடும்பக் கட்டுப்பாட்டில் மிகச் செம்மையாக நடந்துகொண்டிருக்கிறர் என்று சொல்லி, நம் முடைய பெரிய கடவுள் என்று சொல்லப்படுகின்ற சிவபெரு மானே கூட, இரண்டே பிள்ளைகளைத்தான் பெற்றார்—ஒன்று பிள்ளையார், இன்னென்று முருகன் என்று சொன்னர்.' சிவபெருமானுவது இரண்டு பிள்ளைகளைப் பெற்றார். பிள்ளை யார் பிள்ளைகளையே பெறவில்லை. முருகன் பிள்ளைகள் பெற்ற தாகப் புராணம் கிடையாது. எனவே கடவுள்களேகூடக் குடும்பக் கட்டுப்பாட்டை ஒழுங்காக நிறைவேற்றியிருக்கும் பொழுது, நாம்—மனிதர்கள், அதை நிறைவேற்றக் கூடாது—நிறைவேற்றுவது பாபம் என்று கருதுவது தவருன கருத்தா கும். குடும்பக் கட்டுப்பாட்டை நிறைவேற்ருத கடவுள்கள் எல்லாம் என்ன பாடுபட்டார்கள் என்பதைப் புராணமே சொல்லுகிறது. 27 குழந்தைகளுக்குத் தந்தையான குசேலன் என்ன ஆனன்? அவன் கடைசியாக கிருஷ்ணபரமாத்மாவைத் தேடிச் சென்று, குபேரன் ஆனன் என்று புராணம் படிக்கி ருேம். நான் கேட்கிறேன், ஒவ்வொரு கிராமத்திலேயும் உரு வாகிற குசேலர்களுக்கெல்லாம், ஒரு கிருஷ்ணபரமாத்மா கிடைப்பாரா, அவல் வாங்கிச் சாப்பிட்டு அரண்மனைகளையும் மாளிகைகளையும் கட்டித்தர!

அதைப்போலவே நாரத மகாமுனிவர், பெண்ணுருவம் எடுத்து அறுபது குழந்தைகளைப் பெற்றார். பெற்ற காரணத் தினுலேதான் தம்புரா தூக்கிக் கொண்டு ஊரெல்லாம் அலைந்து கொண்டிருக்கிறர் என்று புராணத்திலே படிக்கிருேமேயல்லா மல், அறுபது குழந்தைகளோடு அவர் ஒழுங்காக வாழ்ந்தார் என்று நாம் படிக்கவில்லை. எனவே புராணத்திலேயே நமக்கு நல்ல எடுத்துக்காட்டு இருக்கிறது. அதிகக் குழந்தைகளைப்

பெற்றவர்கள் ஆலாய்ப் பறந்தார்கள். இரண்டே குழந்தை களைப் பெற்ற பரமசிவன் கயிலையங்கிரியில் மிக உன்னதமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்று நாம் படிக்கின் றோம். ஆகவே நம்முடைய கடவுள்களைப் பின்பற்றியாவது நீங்கள் இந்தக் குடும்பநலத் திட்டத்திலே மும்முரமாக ஈடுபட வேண்டுமென்று இந்து மதத்திலே உள்ளவர்களை நான் கேட்டுக்கொள்வேன்.

நாட்டின் பாதுகாப்பில் குடும்பநலத் திட்டச் செயலாக்கத் தில் மதத்தையும் கடந்த நிலையை மேற்கொண்டு இந்த அர சாங்கத்தினுடைய செயல் முறைகளுக்கு ஒத்துழைக்க வேண்டு மென்று மற்ற மதத்தினரையெல்லாம் கேட்டுக்கொள்வேன்.

* *

மருத்துவர் கவனத்துக்கு...!

பெருகி வரும் மக்கள் தொகையை ஒரு அளவில் கட்டுப் படுத்துவதற்கு நாம் ஒவ்வொருவரும் மிகுந்த அக்கறையுடன் பணியாற்ற வேண்டும். குடும்பநலத் திட்டத்தை ஆர்வத் துடன் அமுலாக்க வேண்டும். 1971-72-ல் தென் ஆர்க்காடு, தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் ஆற்றிய பணி போற்றுதற்குரியது. பாமர மக்களிடத்திலும், படித்தவர்களிடத்திலும், அறுவை சிகிச்சைமுறை பற்றியுள்ள ஒருவித பயத்தை நாம் அறவே நீக்கி விட்டதாகச் சொல்வதற் கில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக அறுவை சிகிச்சை யில் ஏற்படுகின்ற சிறு கோளாறுகள் அந்தப் பயத்திற்குக் காரணமாக இருக்கலாம். ஆகவே குடும்பநலத் திட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மருத்துவர்கள், தாங்கள் மேற்கொள்ளும் அறுவை சிகிச்சைகளில் நூற்றுக்கு நூறு வெற்றி காண வேண் டும். ஏழை எளிய மக்களிடம் அறுவை சிகிச்சைக்குப்பின் மருத்துவமனைகளில் அக்கறையுடனும், அன்புடனும் கவனிக்கி றார்கள் என்ற எண்ணம் பரவ வேண்டும். இப்பணியில், ஈடு பட்டுள்ளவர்கள், ஒளிமிக்க எதிர்காலத்தை இந்நாட்டிற்கு உரு வாக்கிக் கொடுக்கும் தொண்டில் ஈடுபட்டுள்ளோம் என்ற எண் ணத்துடன் பணியாற்ற வேண்டும். குடும்பநலத் திட்டத்தை இன்னும் திறம்படச் செயலாற்ற வேண்டும்.

❀ ❀

நோய்கள் பெருகுவதேன்?

மருத்துவமனைகளை விரைவாக — வசதியாக — கட்டிட வேண்டும், அவற்றில் நவீன கருவிகள் இடம் பெறவேண்டும் என்ற முனைப்பு அரசுக்கு உண்டு. அதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

மருத்துவமனைகள் மட்டும் நமது நோய்களைத் தீர்த்து விடாது. நோய்வருமுன் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு நமது வாழ்வை உருவாக்கிக் கொள்ளவேண்டும். இதற்கு பொது மக்கள் ஒத்துழைப்பு நிறையத் தேவை.

அதைக் கடைப்பிடித்தால் மருத்துவமனைகளின் தேவை குறையும். மருத்துவமனைகள் வசதி அதிகரிப்பது ஆட்சியின் சாதனை என்கிற நேரத்தில் "பார்த்தீரா எப்படி நோயாளிகள் பெருகி இருக்கிறார்கள், இந்த ஆட்சியில்!" என்று மறை முகமாக அதுவே எடுத்துச் சொல்லும். கூடுமானவரை மருத் துவமனைகள் தேவை குறையும் வகையில் மக்கள் தங்கள் வாழ்வை ஆரோக்கியமாக அமைத்துக் கொள்ள முன்வர வேண்டும்.

மக்கள் தொகை அதிகரிப்பு காரணமாகவும் நோய் பெருகு கிறது. சென்னையில் சைதாப்பேட்டை பகுதியில்தான் அதிக மக்கள் தொகைப் பெருக்கம். 1967-ஆம் ஆண்டு தேர்தலில் நான் சைதைத் தொகுதியில் நின்றபோது இருந்த வாக்காளர் களைவிட மேலும் அரைப்பங்கு அதிகமான வாக்காளர்கள் 1971-ஆம் ஆண்டு தேர்தலில் ஆகிவிட்டார்கள்.

சைதாப்பேட்டையில் மாத்திரமல்ல, சென்னையில் பல இடங்களில் பல தொகுதிகளில் மக்கள் பெருக்கம் அந்த அள விற்கு வளர்ந்திருக்கிறது. வருகின்ற மாநகராட்சி மன்ற தேர் தலில் கூட இப்போதுள்ள 120 வட்டங்கள் இன்னும் அதிக மாக ஆகவேண்டுமென்ற அளவிற்கு ஆலோசனைகள் நடை பெறுகின்றன.

பெருகும் காரணம்

இந்தப் பெருக்கத்திற்குக் காரணம் நம்முடைய நாவலர் எடுத்துச் சொல்வதைப் போல, தனி மனிதர்களின் முயற்சி மாத்திரமல்ல! வெளியூர்களிலிருந்தும், கிராமப் புறங்களிலிருந்

தும், ஏராளமான மக்கள் சென்னையை நோக்கி குடியேறுவதும், இங்கே வாழுவதற்கான வழி இருக்கிறது என்ற நம்பிக்கையோடு சென்னைக்கு வருவதும்தான்.

நகர்ப்புறங்களில் உள்ளவர்கள் கிராமத்தினை நோக்கிச் செல்லவேண்டுமென்று காந்தியடிகள் ஒரு காலத்தில் அறிவுரை வழங்கினார். அதற்கு நேர் மாறாக கிராமப்புறத்தில் உள்ளவர்கள் நகரத்தினை நோக்கி வருகிற காட்சி நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. கிராமப்புற மக்கள் வேலை வாய்ப்பிற்காக மாத்திரமல்ல, நகர்ப்புறங்களில் பொழுது போக்கிற்கான பல நவீன வசதி வாய்ப்புகளை மனதில் கொண்டு, அதைக் கண்டு மகிழவும், அனுபவிக்கவும் சென்னைக்கு வருகிறார்கள். வேறு மதுரை, கோவை, திருச்சி போன்ற நகரங்களுக்கும் செல்கிறார்கள்.

சென்னையைப் பொறுத்தவரை கொஞ்சநாட்கள் வீதிகளில் வாழ்கிறார்கள். பிறகு அவர்களாகவே சில இடங்களைத் தேர்ந்தெடுத்து, தனிப்பட்டவர்கள் வாங்கி வீடு கட்டாமல் வைத்திருக்கிற இடங்களிலோ, அல்லது அரசினுடைய புறம்போக்கு நிலத்தினிலோ, சுதந்திரமாக குடியேறலாம் என்று எண்ணிக் குடியேறுகிறார்கள்.

கொஞ்சம் முரட்டு சுபாவம் கொண்டவர்கள், இப்படிப்பட்ட இடங்களைக் காலி செய்யவேண்டுமென்று உரிமையாளர்கள் கேட்கிற நேரத்தில், போர்க் குணத்தோடு இறங்குகிறார்கள், முரட்டு சுபாவம் இல்லாமல் கொஞ்சம் புத்திசாலித்தனமாக இருப்பவர்கள், யாருடைய ஆட்சி நடைபெறுகிறது என்று பார்த்து, அதற்கேற்ப நடப்பது—காங்கிரஸ் ஆட்சியாக இருந்தால் 'காமராசர் நகர்' என்றும்—முன்னேற்றக் கழக ஆட்சியாக இருந்தால் 'கருணாநிதி நகர்', 'நாவலர் நகர்', 'அன்பழகன் நகர்' என்பது போன்ற நகர்களையும் அமைத்துக் கொள்கிறார்கள். ஆகவே குழந்தைகளின் புதிய வரவால் மாத்திரமல்ல, இப்படிப்பட்ட காரியங்களாலும் மக்கள் நெருக்கம் சென்னையில் அதிகமாகிக்கொண்டு வருகிறது.

இந்த அரசைப் பொறுத்தவரையில் கடந்த நான்காண்டுக் காலத்தில் ஏராளமான மருத்துவ வசதிகளைத் தமிழகத்தில் செய்து கொடுத்திருக்கிறோம். பேராசிரியர் அன்பழகன் அவர்கள் இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, தனி கவனமே இன்றைய தினம் செலுத்தப்படுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த அளவிற்கு இந்தத்துறை மிகுந்த பொறுப்போடு செயல்பட்டு வருகிறது.

❋ ❋

அளவோடு பெற்று
வளத்தோடு வாழ்க!

கண்ணெளி வழங்கும் திட்டமும், நிலமற்றோர், வீட்டு மனையற்றோருக்கு நிலப்பட்டாக்கள் வழங்குகின்ற திட்டமும், குடும்பநலத் திட்டமும் ஒரு சேர நிகழ்ச்சி களாகத் தொகுக்கப் பெற்று, இந்தப் பந்தலிலே நடை பெற்றுக் கொண்டிருப்பது சிலாக்கியமான ஒன்றாகும். எனக்கு முன்னால் பேசிய அமைச்சர் பெருமக்களும், நண்பர் களும் எடுத்துக்காட்டியதைப்போல், பேரறிஞர் அண்ணா அவர் களால் உருவாக்கப்பட்ட இந்த அரசு, தமிழகத்திலே இருக் கின்ற ஏழை எளிய மக்கள், பாட்டாளி மக்கள், கிராமப்புறத் திலே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள், இவர்களுடைய நலன் மையமாக வைத்து, தன்னுடைய பயணத்தைத் தீவிர மாக நடத்திக் கொண்டிருக்கிறது.

சட்டப்பேரவையிலே 1967-ஆம் ஆண்டு, எங்கள் அண்ணன் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு வரவு செலவுத் திட்டத்திலே ஆற்றிய பதிலுரையில் திடமாகவும், அழுத்தம் திருத்தமாகவும், "இந்த அரசு தீட்டுகின்ற திட்டங்கள் எதுவா யினும், அது நாட்டுப்புறங்களிலே இருக்கின்ற மக்கள்—பசித்த மக்கள்—கிராமப்புறத்து விவசாயப் பெருங்குடி மக்கள்—சாமான்ய மக்கள்—நடுத்தரமக்கள்—இவர்களுடைய நல் வாழ்வை மையமாகக் கொண்ட திட்டங்களாகத்தான் இருக் கும்", என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பு, அண்ணன் மறைந்த பிறகும் செயல்படுத்தப்படுகிறது. அண்ணன்தான் மறைந்தாரே தவிர, அவருடைய கொள்கைகள்—இலட்சி யங்கள்—உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவைகளுக்கு அழிவே கிடையாது. அவைகளைச் செயல்படுத்துகின்ற அரசு இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நல்வாழ்வுத் திட்டங்கள்

ஒரு புறத்திலே கண்ணெளி பெறுகின்றவர்கள் கூடியிருக்கின்றீர்கள். இன்னெரு புறத்திலே பட்டா பெறுகின்றவர்கள் கூடியிருக்கின்றீர்கள். பெறுகின்றவர்கள் கூடியிருக்கின்ற இதே இடத்தில், பெற வேண்டாம் என்று சொல்வதற்கான உபதேசமும் நடக்க இருக்கிறது—நடந்தும் இருக்கிறது. பட்டாக்களைப் பெறுங்கள்; கண்ணெளியைப் பெறுங்கள்; ஆனால் பிள்ளைகளை மாத்திரம் அதிகமாகப் பெறுதீர்கள்—என பெறுங்கள் என்பதற்கு இரண்டு உபதேசங்களும், பெறுதீர்கள் என்பதற்கு ஒரு உபதேசமும் இந்த இடத்திலே இப்பொழுது நடந்துகொண்டிருக்கிறது. பெறுமல் இருந்தால்தான், அதாவது குழந்தைகளை அதிகமாகப் பெறுது இருந்தால்தான், எவ்வளவு பெரிய திட்டங்களைப் போட்டாலும், அந்தத் திட்டங்களுக்காகக் கோடிக்கணக்கிலே செலவழித்தாலும் அதனுடைய உண்மையான பயனை நாட்டு மக்கள் துய்த்திட முடியும் என்பதனை உணர்ந்துதான் குடும்பநலத் திட்டத்தை வேக வேகமாக நம்முடைய இந்தியப் பெரு நாடு நிறைவேற்றி வருகிறது.

அதிலே தமிழ்நாடு எந்த மாநிலத்திற்கும் பின் தங்கியதில்லை என்கிற சூழ்நிலையில், வெற்றியினை விளைவித்துக்காட்டியிருக்கின்றது. 1971-ஆம் ஆண்டு தமிழக அரசு தீட்டிய திட்டத்திற்கு ஏற்ப, மக்கள் நல்வாழ்வு—குடும்பநலத் துறையினர், அதிலும் குறிப்பாக அந்தத் துறையினுடைய அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் ஆகியோர் எடுத்துக்கொண்ட நல்ல முயற்சியின் காரணமாகவும், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எடுத்துக் கொண்ட தீவிர நடவடிக்கைகளின் காரணமாகவும் குடும்பநலத் திட்டத்தில் இந்தியாவிலேயே பெருத்த வெற்றியினைத் தமிழகம் பெற்றுக்காட்டியிருக்கிறது. இந்த ஆண்டும் (1972) அந்தத் தீவிர திட்டத்தைத் தொடங்கி வைக்கின்ற நல்ல தோர் விழா வேலூர் நகரத்தில் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கட்டாயம் இல்லை !

இந்த மாவட்டத்தில் இந்த ஆண்டு 25 ஆயிரம் பேருக்கு குடும்பநல அறுவை சிகிச்சை செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக நம்முடைய மக்கள் நல்வாழ்வு—குடும்பநலத்துறையினுடைய இயக்குநர் அவர்கள் அறிவித்திருக்கிறார். அப்படிப்பட்ட காரியங்கள் அவரவர்களுடைய இஷ்டத்திற்கு ஏற்பவும், மற்றவர்கள் எடுத்துச் சொல்ல, அதைப் புரிந்து கொண்டு, அதற்கு உடன்படுகின்றவர்களுடைய உள்ளத்திற்கு ஏற்பவும் நடைபெற்று வருகிறது என்பதனையும், அதிலே கிஞ்சித்தும் கட்டாயம் இல்லை என்பதனையும், அழைத்து வருவதற்கோ, அல்லது அறிவுரை கூறுவதற்கோ யாரும் நிர்ப்பந்தப் படுத்த மாட்டார்கள் என்பதையும் நான் மீண்டும் ஒரு முறை இந்தக் கூட்டத்திலே தெரிவித்துக் கொள்கிறேன், தமிழக அரசின் சார்பாக!

பெரிய பெரிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற நம்முடைய நாட்டிலே குடும்பநலத் திட்டம் நல்ல முறையிலே இயங்கியாக வேண்டும். அந்தக் காரணத்திலேதான், இரண்டு வெற்றிகரமான திட்டங்களை மகிழ்ச்சியோடு நாம் இங்கே கடத்தி—நிறைவேற்றிக் கொண்டாடுகிற நேரத்தில், குடும்ப நலத்திட்ட முன்னேற்ப இயக்கத் துவக்க விழாவினையும் நாம் இதிலே இணைத்திருக்கிறோம்.

கண்ணொளி பெற்றவர்கள் கிட்டத்தட்ட ஐநூறுக்கு மேற் பட்டவர்கள் இந்தப் பந்தலிலே இருக்கின்றீர்கள். வட ஆர்க் காடு மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த பெரியவர் கள் இங்கே குழுமியிருக்கின்றீர்கள். உங்களையெல்லாம் காணு கின்ற நேரத்தில் நான் ஒரு புதிய உணர்ச்சி பெறுகிறேன். நீங்கள் கண்ணொளி பெற்று களிப்படைகின்ற நேரத்தில், என் னுடைய உடம்பெல்லாம் புல்லரிக்கிறது. உள்ளமெல்லாம் புளகாங்கிதம் அடைகிறது. இதற்கு முன்பு இது போன்று ஏன் நடைபெறவில்லை? இன்றைக்கு மாத்திரம் நடைபெறுவ தற்கு என்ன காரணம்? என்று கேள்விகளை உங்களுக்குள்ளா கவே கேட்டுக் கொள்ளுங்கள் என்றெல்லாம் இங்கே பேசிய நண்பர்கள் சுட்டிக் காட்டினார்கள்!

சுட்டிக் காட்டிய நேரத்தில் நண்பர்கள் கொஞ்சம் உருக்க மாகக்கூடச் சொன்னார்கள். வேகமாகக் கூடச் சொன்னார்கள்! இவர்களுக்கெல்லாம் கண்ணொளி வழங்குகின்றீர்கள்; நாட்டில் இதையும் கிண்டல் செய்கிற, கேலி செய்கிற சில குருடர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு நீங்கள் கண்ணொளி வழங்க வேண்டும் என்றெல்லாம் கூட என்னிடத்திலே வேண்டுகோள் விடுத்தார்கள். நான், கண் பார்வையற்றவர்களுக்குக் கண் ணொளி வழங்குகின்ற திறமையான டாக்டர்களைத்தான் கை வசம் வைத்திருக்கிறேன் அல்லாமல் அப்படிப்பட்டவர்களுக்குக் கண்ணொளி வழங்குகிற திறமை படைத்த டாக்டர்கள் யாரும் என்னிடத்திலே கைவசம் இல்லை என்பதை, அந்த நண்பர் களுக்கெல்லாம் மிகுந்த வினயத்தோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

கண்பார்வை இழந்தோர்

தமிழகத்தில் மாத்திரம் கண் பார்வை இழந்த முதியோர், இளையோர், ஏழைகள், கிராமப்புறத்து மக்கள் என்கின்ற வகையில் பத்து லட்சம் பேர் இருக்கின்றார்கள். அவர்களுக் கெல்லாம் கண் பார்வை வழங்க வேண்டுமென்ற திட்டத்தை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. அதற்கான திட்டத்தைச் செயல்படுத்துகின்ற நேரத்தில், இது அரசு மாத்திரமே தனி யாக நின்று செய்கின்ற காரியமாக அல்லாமல், அந்தந்தப் பகு தியிலே இருக்கின்ற மக்களுக்கும் அதிலே ஒரு தொடர்பு இருக்கவேண்டும், அவர்களுடைய சேவைக்கும் அதிலே ஒரு பங்கு இருக்க வேண்டும். அவர்களுக்கும் இதிலே பொறுப்பு

இருக்க வேண்டும். நல்ல உள்ளம் படைத்த வள்ளல் தன்மை வாய்ந்தவர்கள்—பணம் படைத்தவர்கள் அவர்களெல்லாம்கூட இந்த அறக்காரியத்திற்குத் தங்களால் இயன்றதைச் செய்திட வேண்டும் என்கின்ற ஆசை ஆர்வத்தோடுதான், என் னுடைய பிறந்த நாளின்போது இந்தத் திட்டத்தை நான் அறிவித்தேன்.

அமெரிக்க நாட்டிற்கு நான் சென்றிருந்தபோது என்னோடு வந்த டாக்டர் வெங்கிடசாமி அவர்களிடத்தில் இது பற்றி விரி வாக விவாதிக்க எனக்கு நேரம் கிடைத்தது. திரும்பி வந்த பிறகு நம்முடைய நண்பர் டாக்டர் ஆப்ரகாம் அவர்களிடத்தில் விவாதிக்க நேரம் கிடைத்தது. ஆப்ரகாம் அவர்களுக்கும் எனக்கும் ஏற்பட்ட தொடர்பு இன்று நேற்று அல்ல. 1953-ஆம் ஆண்டிலிருந்து எனக்கும் அவருக்கும் கண் தொடர்பு உண்டு. நான் ஒரு விபத்திலே சிக்கி, என் னுடைய கண்ணிலே கோளாறு ஏற்பட்ட நேரத்தில் அவர் என் னுடைய கண்ணைச் சிகிச்சை செய்ய 1953-ஆம் ஆண்டிலேயே தொடங்கினார். அது முதல் அவருக்கும் எனக்கும் நல்ல தொடர்பு உண்டு. ஆனால் வெங்கிட சாமி அவர்கள் போகிற வேகத்துக்கு ஆப்ரகாம் அவர்கள் போவது இல்லை.

ஒரே நாளில் ஆயிரம் அறுவை சிகிச்சை. இரண்டாயிரம் பேருக்கு அறுவை சிகிச்சை என்றெல்லாம் கூட, டாக்டர் வெங்கிடசாமி அவர்கள் செய்து காட்டுகிறார். நம்முடைய நண்பர் ஆப்ரகாம் அவர்கள் 500 பேர் 600 பேர் என்றளவுக்கு அறுவை சிகிச்சைகளைச் செய்து காட்டுகிறார். நான், என் இந்த மாற்றம் என்று டாக்டர் பாலகிருஷ்ணன் அவர்களி டத்திலே கேட்டேன். "வெங்கிடசாமி எங்களிடத்திலே சண்டை போட்டு அதிகம் டாக்டர்களை எல்லாம் வாங்கிக் கொள்கிறார். ஆப்ரகாம் அப்படிச் செய்வதில்லை", என்று டாக்டர் பாலகிருஷ்ணன் அவர்கள் சொன்னார்! ஆப்ரகாம அவர்களுடைய இயல்பு எனக்கு நன்றாகத் தெரியும். பேச்சைக் கூட அதிரப் பேசமாட்டார். கண் அறுவை சிகிச்சை செய்கிற நேரத்திலே, அந்த அறுவை சிகிச்சைக்கான கருவிகள் எவ் வளவு மெதுவாக, நுட்பமாக அசைகின்றனவோ, அதைப் போலத்தான் அவர்களுடைய உதடுகள் அசையும். நான் அவரு டன் நெருங்கிப்பழகியதிலே அவரைப் பற்றிப் புரிந்து கொண்டி ருக்கின்ற உண்மை இது! ஆகவே தட்டிக் கேட்டால்தான் அதிகமான டாக்டர்களைத் தருவோம் என்ற கொள்கையை நண்பர் பாலகிருஷ்ணன் வைத்துக் கொள்ளாமல், தட்டிக்கேட் காதவர்களுக்கும் அதிகமான டாக்டர்களை வழங்க வேண்டும் என்ற கொள்கையை வைத்துக் கொண்டால், இங்கேயும் ஒரு ஆயிரம் பேருக்குக் கண் சிகிச்சை அளித்திருக்க முடியும் என்று நான் கருதுகின்றேன். அந்த வகையிலே இந்த முயற்சிகள் மேலும் தொடர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு (1972) மட்டும் ஒரு லட்சம் பேர்களுக்குக் கண் சிகிச்சையளித்துக் கண்ணொடிகளை வழங்க வேண்டுமென்று

திட்டமிட்டிருக்கிறோம். இந்த மாவட்டத்தில் 10 ஆயிரம் பேருக்கு இந்த ஆண்டு கண் அறுவை சிகிச்சைகளை முடித்து, கண்ணொடி வழங்குவதற்காக மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் அவர்கள் என்னிடத்திலே ஒப்புக் கொண்டிருக்கிறார். அவர் இன்றைக்கு மூன்று லட்சம் ரூபாய் தந்தார். ஏற்கனவே இரண்டு லட்ச ரூபாய் தரப்பட்டிருக்கிறது, ப. உ. சண்முகம் அவர்களிடத்தில்! ஆக இந்த மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப் பட்ட தொகையைவிட 2 ஆயிரம் ரூபாய் அதிகமாகவே கிடைத்திருக்கிறது. புதிய மாவட்ட ஆட்சித் தலைவர், நல்ல இளமைத் துடிப்போடு காரியங்களை ஆற்றக் கூடியவர்! ஐந்து லட்சம்தானு என்று கேட்க மனம் தூண்டுகிறது. அப்படிக் கேட்டதற்காகக் கட்டாய வசூலில் இறங்காமல், யாராவது வலிய வந்து கொடுத்தால் அந்தப் பணத்தையும் பெற்று, இந்த ஆண்டிலே 10 ஆயிரம் பேருக்குக் கணக்கு இருந்தாலும் 15 ஆயிரம் பேருக்கு அறுவைசிகிச்சைகளைச் செய்து, கண்ணொளி வழங்கினோம் என்ற அந்தத் திட்டத்தினுடைய வெற்றியை அவர் எனக்குக் காட்ட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னைப் பெற்ற ஏழைகள்!

கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஏழை எளிய மக்களுடைய அவதி எனக்கு நன்றாகத் தெரியும். ஏனென்றால், நானும் கிராமத்திலே இருந்து, ஒரு காலத்தில் பட்டினத்தில் குடியேறியவன்தான். கிராமத்திலே சாதாரண மக்களோடு பழகக் கூடிய வாய்ப்பை அன்றைக்கும் பெற்றிருந்தேன்; இன்றைக்கும் பெற்றிருக்கிறேன்; என்றைக்கும் பெற்றிருப்பேன். என்னுடைய தாயோ, தந்தையோ, பெரிய மிட்டாமிராசு குடும்பத்திலே பிறந்தவர்கள் அல்ல. என்னுடைய தந்தை சங்கீதத்திலே திறமை படைத்தவராக இருந்தாலும், ஒரு ஏழை விவசாயியைப் போலத்தான் உழைத்துக் கொண்டிருந்தார். எங்கள் வயலில், எங்கள் தந்தையே கலப்பையைப் பிடித்து உழுத காட்சியையும், என்னுடைய தாயாரே நடவு நட்ட காட்சியையும் கண்ட கண்கள்தான், இந்தக் கண்கள்! ஆகவே விவசாயக் குடும்பத்திலே பிறந்து, விவசாயிகளுடைய வேதனைகளைத் தெரிந்து, விவசாயப் பெருங்குடி மக்கள் கிராமப்புறத்திலே விஞ்ஞான நிலைகள் பரவாத காரணத்தினால், தங்களுடைய கண்ணுக்கு வந்திருக்கின்ற நோய்—தங்களுடைய கண்ணிலே ஏற்பட்டிருக்கின்ற பார்வை மங்கல், இவைகளெல்லாம்கூட, ஏதோ ஆண்டவனால் ஏற்பட்டது—இதைத் தீர்க்கவே முடியாது—ஒவ்வொரு நாளும் சூரியநமஸ்காரம் செய்தால் இது போய்விடும் என்றெல்லாம் கருதிக் கொண்டு, இன்றைக்கும் கிராமப்புறத்திலே ஏராளமான மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நாம் எடுத்துச் சொல்லியாக வேண்டும்—அப்படிச் சொல்லுகின்ற முயற்சிதான் இந்தத் திட்டம்! நீங்கள் கிராமத்திலே இருக்கிறீர்கள்! தனியாக டாக்டரிடம் சென்று கண்ணைக் காட்டி, சிகிச்சை பெறவேண்டுமேயானால் குறைந்தது

150 ரூபாயாவது செலவாகும். இங்கே அப்படியல்ல. ஏதோ ஒரு கல்யாணத்துக்கு வருவதைப் போல வந்து, வந்த விருந்தாளி ஐந்தாறு நாள் தங்குவதைப் போலத் தங்கி—ஐந்தாறு நாள் நல்ல பக்குவமாகச் சமைக்கப்பட்ட சாப்பாடும் வசதிகளுமாக இவைகள் அனைத்தும் அளிக்கப் பெற்று, கண் சிகிச்சையும் தரப்பட்டு, கண்ணடி வழங்கப்படுவதற்கு ஒரு நபருக்கு இங்கே செலவு ஐம்பதிலேயிருந்து அறுபது ரூபாய் வரை ஆகிறது. இது மொத்தமாகச் செய்யப்படுகிற காரணத்தினால் இந்தச் செலவாகிறது. தனியாக ஒரு மனிதன், தானே நேரிலே சென்று டாக்டரை அணுகி சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டுமேயானால், நூறு அல்லது 150 ரூபாய் ஆகும். இந்தக் கஷ்டத்திற்காகவும், அல்லது அழைத்துப் போக ஆள் இல்லாத காரணத்தினாலும், இப்படி ஒரு வழி இருக்கிறது சொல்லுவதற்கு என்று யாருமே இதுவரையிலே முன் வராத காரணத்தினாலும், நாட்டிலே லட்சக் கணக்கான மக்கள், தங்களுடைய கிராமப் புறத்திலே, வீட்டுத் திண்ணைகளில், வீதிகளில் தட்டுத் தடுமாறிக் கொண்டு, தாங்கள் பெற்ற மகன்கூடக் கவனிக்காத நிலையில், எந்தக் குடும்பத்திற்காக உழைத்தார்களோ—எந்தப் பிள்ளை நன்றாக வளர வேண்டுமென்று எண்ணினார்களோ—எந்தப் பேரப்பிள்ளைகளை மடியிலே தூக்கிப் போட்டுக் கொண்டு கொஞ்சினார்களோ, குலவினார்களோ அந்தப் பேரப் பிள்ளைக்கூட, "சும்மாகிட கிழம்! உனக்கு வேறு வேலையே கிடையாதா", என்று தட்டிச் சொல்லுகிற நேரத்திலே, மன வருத்தத்தோடு எந்த முதியவர்கள்—தாய்மார்கள்—தாத்தாக்களாக இருப்பவர்கள்—பாட்டன்களாக இருப்பவர்கள்—பாட்டிகளாக இருப்பவர்கள்—மனம் பரிதவித்தார்களோ, அவர்களெல்லாம் பரவசமடையத்தக்க அளவுக்கு, அதே பேரக் குழந்தைகளை மறுபடியும் தங்கள் கண்ணால் பார்த்து, 'நீ மாத்திரம் வேலை செய்யாதே! என்னால் முடிந்த அளவுக்கு நானும் வேலைகளைச் செய்கிறேன்' என்கின்ற அளவுக்குச் சிறிய பெரிய வேலைகளில் ஈடுபட்டு, அந்தக் குடும்பத்திற்குத் தான் உதவியாக இருக்க முடியவில்லையே என்ற கவலையிலிருந்து விடுபட்டு—மனநோய் குறைந்தாலே எல்லா நோய்களும் குறையும் என்பார்கள்—அதைப் போல மனநோயைக் குறைத்துக் கொண்டு, அந்தக் குடும்பத்திலே மகிழ்ச்சியோடு திளைப்பதற்கான ஒரு சூழ்நிலையை இன்றைக்குத் தமிழக அரசு உருவாக்கி இருக்கிறது.

பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள்

இதற்கு அரசாங்கத்தினுடைய சார்பிலேயே மொத்தப் பணத்தையும் செலவழித்திடக் கூடும். முடியாத காரியம் அல்ல! பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்திற்கு நண்பர்கள் எல்லாம் எடுத்துக் காட்டியதைப்போல், என்னுடைய பிறந்த நாளின்போது அனைவரும் ஒரு ஆண்டு காலத்திற்கு 40 லட்ச ரூபாய் தந்தாக வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டேன்.

கேட்டது 40 லட்ச ரூபாய்! ஆனல் தமிழ் நாட்டுப் பெருங்குடி மக்கள், அந்தத் திட்டத்தின் மீதுள்ள ஆர்வத்தின் காரணமாக ஒரு கோடி ரூபாய் அளித்தார்கள்.

இன்றைக்குத் தமிழ்நாட்டில் 10 இடங்களில் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் கட்டப்பட்டு, அவைகளில் தொழு நோய்ப் பிச்சைக்காரர்கள்—குஷ்டரோகப் பிச்சைக்காரர்கள் அங்கே குடியமர்த்தப்பட்டு. அவர்களுக்கான நற்பணிகள் நடைபெறத் தொடங்கியிருக்கின்றன. மூன்று இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டு, அதிலே தொழு நோய்ப் பிச்சைக்காரர்கள் குடியமர்த்தப்பட்டு விட்டார்கள். மீதமுள்ள ஏழு இல்லங்களும் கட்டிமுடிக்கப்படுமேயானல், தமிழ் நாட்டிலே தொழு நோய்ப் பீடித்த பிச்சைக்காரர்களாக உள்ள 6,000 பேர்களும் வலிவிலே வந்தாலும் வரவேற்போம். வராவிட்டால், அவர்கள் போலீசாரால், சட்டப்படி அந்த இல்லங்களுக்கு அழைத்துச் செல்லக் கூடிய கட்டாயத் திட்டத்தைத் தமிழக அரசு மிக விரைவிலே நிறைவேற்ற இருக்கின்றது.

ஏழைகளின் அரசு

இவைகளுக்கு அரசாங்கத்தினுடைய பணத்தை செல வழிக்காமல், ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 5 லட்சம், 10 லட்சம் என்று வசூலிக்கவேண்டுமென எண்ணியிருப்பதற்குக் காரணம், எத்தனையோ பணக்காரர்கள் இருக்கிறார்கள், அவர்கள் 10 ஆயிரத்தையோ, 20 ஆயிரத்தையோ செலவழித்து இப்படிப்பட்ட ஒரு பெரிய முகாமை நடத்திட இயலாது! ஒரு 10 ஆயிர ரூபாய் தரவேண்டும், நல்ல காரியத்திற்குப் பயன்பட வேண்டும் என்று எண்ணுகின்ற பணக்காரர்கள் பல பேர் இருக்கின்றார்கள். நான் என்னைப் பொறுத்த வரையில் சொல்லிக் கொள்வேன், ஏழை எளிய மக்களுக்காகப் பணக் காரர்களிடத்தில் பணம் பெறுவதில் எந்தவிதமான தவறும் கிடையாது. நான் என்னுடைய கட்சிக்காக எந்தப் பணக்காரரி டமிருந்தும் பணம் வாங்கியது கிடையாது; வாங்கப் போவதும் கிடையாது! கட்சியிலே இருக்கிற பணக்காரர் களிடம் கூட, கட்சிக்காக நான் பணம் வாங்கியது கிடையாது! ஆனல் இந்த நாட்டிலே இருக்கிற ஏழை மக்களுக்காகப் பணக் காரர்களிடம் பணம் பெறுவதில் தவறு இல்லை. அவர்களுடைய பணம் நல்ல காரியங்களுக்காகச் செலவழிக்கப்படவேண்டும் என்ற அந்த நல்ல எண்ணத்தோடுதான், அரசாங்கத்தின் சார் பிலே இந்தத் திட்டத்தை ஆரம்பித்து நடத்தி வருகிறோம்.

இதுவரை 13 ஆயிரம் பேருக்குத் தமிழ்நாடு முழுவதிலும் இந்தக் கண் சிகிச்சை செய்யப்பட்டு, கண்ணடிகள் வழங்கப் பட்டு, கண்ணொளி தரப்பட்டிருக்கின்றது. மீதமுள்ளவர்களுக்கு இந்த ஆண்டு முடிவிற்குள்ளாக நிறைவேற்றப்பட இருக்கிறது.

வட ஆர்க்காடு மாவட்டத்திலே மாத்திரம் இந்த ஐந்தாண்டு காலத்தில், ஏறத்தாழ 97 ஆயிரம் பேருக்கு வீட்டு மனைப் பட்டா, நிலப்பட்டா அளிக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஒரு ஐயாயிரம் பேருக்கு வீட்டுமனைப் பட்டாவும், நிலப் பட்டாவும் அளிக்கப்பட்டுள்ளது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர்—வருவாய்த்துறை அமைச்சர் நண்பர் ப. உ. சண்முகம் அவர்களுடைய சீரிய முயற்சியினால், கடந்த இரண்டு மூன்று ஆண்டு காலத்தில் கிட்டத்தட்ட 5 லட்சம் பேருக்கான பட்டாக்கள், வீட்டுமனைகள், அதைப் போலவே சாகுபடிக்கான நிலங்கள், நிலமற்ற ஏழை எளியவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற காட்சியினை நாம் காணுகின்றோம். கடந்த 20 ஆண்டு காலத்திலே, ஆயிரக்கணக்கானவர்களுக்குத்தான் பட்டாக்கள் வழங்கப்பட்டன. ஆனால் இந்த 5 ஆண்டு காலத்தில் லட்சக் கணக்கானவர்களுக்குப் பட்டாக்களை வழங்கிய சிறப்பு திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு உண்டு.

ஒரு நாட்டினுடைய தேவை, அதுவும் சுதந்திரம் பெற்ற, வெள்ளி விழா கொண்டாடி இருக்கின்ற இந்தியப் பெரு நாட்டினுடைய தேவை என்ன என்பதை நாம் புரிந்துக் கொண்டாக வேண்டும்! பொதுவாக ஒரு நாட்டிலே இருக்கிற ஒரு குடிமகனுக்கு அத்தியாவசியத் தேவைகள் உணவு, உடை, இருக்கின்ற இடம், குடிக்க நல்ல பாதுகாக்கப்பட்ட தண்ணீர்! இவைகளுக்கான கவலைகள் எல்லாம் இன்றைக்குத்தான் நம் முடைய உள்ளங்களிலே பாய்ந்து அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றோம்.

ஒவ்வொரு துறையிலே இருக்கின்ற அமைச்சர்களும், இந்த அரசாங்கத்தினுடைய அதிகாரிகளும், இந்த அரசாங்கத்தினுடைய கொள்கையைத் தெளிவாகப் புரிந்து வைத்துக் கொண்டு, அந்த லட்சியம் என்ன? யாருக்காக இந்த அரசு அமைந்தது? யாரால் அமைந்தது? யாரால் நடத்தப்படுகிறது? ஏழைகளால், ஏழைகளுக்காக அமைந்த அரசு! ஏழைகளால் நடத்தப்படுகின்ற அரசு! அப்படிப்பட்ட அரசினுடைய கொள்கைகளைத் தீவிரமாக, வெற்றிகரமாக ஆக்குவதற்கு அனைவரும் ஒத்துழைக்கிறார்கள். பொது மக்களும் ஒத்துழைக்கிறீர்கள். அதிகாரிகளும் ஒத்துழைக்கிறார்கள். மருத்துவத்துறை நண்பர்களும் ஒத்துழைக்கிறார்கள். அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[வேலூரில் ஒரே மேடையில் 1972-ஆம் ஆண்டு செப்டம்பர் 25-ல் நடைபெற்ற கண் சிகிச்சை முகாம் நிறைவு விழா, பட்டா வழங்கு விழா, குடும்பநல முன்னேற்பு இயக்க விழா ஆகியவற்றின்போது ஆற்றிய உரை]

* *

படைப்பிலும் மிகுவது
பதைப்பேயாகும்!

தகவி என்பாள் தகவிதியை
எண்ணிக் கொண்டு கிடப்பவளோ?
இல்லை! இல்லை!—

தன் தகவிதியை மாற்றுதற்குத்
தோழியினைத் தூதாக்கி—
செவிலியையும் தோதாக்கி—
தென்றல் சுமந்து வரும்
காதலனை—
நின்று சுடும் நிலவினிலே வரவேற்கக்
காத்திருப்பாள்—

தோழன் என்றும் துரோகியானதில்லை அகப்பாட்டில்!
புறப்பாட்டில் துரோகி உண்டு—அவன் ஆரம்பப்
புறப்பாட்டிலேயே அது வெளிச்சமாகும்!

ஊரார் பழிப்புக்குக் காதல் ஒளிந்து
மறைவதில்லை—
ஆனால் இன்று

ஊரார் எதிரிலேயே கடற்கரையில்—
காருக்குள்—கலியரங்கில்
காதல் சேட்டை என்ன நியாயம்?
ஊரார் எல்லாம் ஊனமுற்ற விழி
படைத்தோர் எனும் நினைப்போ?
அன்றிக் காதலர்கள்
கண் மூடிக் கொண்டதாகத்
துணிதல் நன்றோ?

காதலுக்கும் வழி வைத்து
கடமைக்கும் இடம் வைத்து
கண்ணியத்தை நிலை நிறுத்தி—
கட்டுப்பாட்டுடன் வாழ்வது தான்
அகத்துறைப் படைப்பாகும்—குடும்பக்
கட்டுப்பாட்டுடன் வாழ்வது தான்—இன்றைய
அகத்துறைப் படைப்பாகும் !
அகத்துறையில் படைப்பென்று
ஆறு ஏழு எட்டென்று படைத்து விட்டால்—

பின்,

படைப்பிலுல் மிகுவது
பதைப்பே யாகும் !—
அறிந்து சொன்னேன்—நன்றாய்ப்
புரிந்து சொன்னேன்—அனுபவத்தில்
தெரிந்து சொன்னேன்—உணர்வீர் நன்கு !

தொழிலாளர் நலம்பெற....!

இயல்பாக நடந்து வரும் குடும்பநலப்பணிகளை முனைப் போடு செயல்படுத்த, பல்வேறு வகையான முறைகளில் துரித மாகச் செயலாற்ற இருவார விழாக்களைப் பயன்படுத்திக் கொள்வது தமிழகத்தின் வழக்கம். மற்ற மற்ற துறைகளின் நிறைவேற்றத்தில் சிறப்பானதொரு இடத்தைப் பெற்றுள்ள தமிழ்நாடு, குடும்பநலத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல் படுத்தும் சிறந்த மாநிலங்களில் ஒன்றாகவும் இருந்து வருவதை அனைவரும் அறிவர்.

தமிழக அரசின் ஆர்வம்

சென்ற ஆண்டுகளில், (1971-72, 1972-73) குடும்பநலத் திட்ட முனைப்பு இயக்கங்களை நடத்தி, இந்திய அரசு தமிழ் நாட்டிற்கு என வகுத்தளித்த இலக்கையும் விஞ்சிய பெருஞ்சாதனையை ஏற்படுத்தினோம். ஆனால் இந்த ஆண்டு .....? இந்திய அர சுக்கு எதிர்பாராத வகையில் ஏற்பட்டநிதி நெருக்கடி காரண மாகக் குடும்பநலத்திட்டச் செயலாக்கத்திற்கென ஒதுக்கப் பட்டதொகையில் வெட்டினை ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதன் காரணமாகச் சென்ற ஆண்டு முனைப்பு இயக்கம் நடந்த போது அறுவைச் சிகிச்சை ஒவ்வொன்றிற் கும் ரூ. 100 வரை நிதி உதவியது போல இந்த ஆண்டு தர இயலாது என மத்திய அரசினர் அறிவித்துவிட்டனர். தமிழ கத்தில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களையொட்டியோ அல்லது தனித்தோ, கட்டப்பட்டுக் கொண்டிருந்த குடும்ப நலத் திட்டக் கட்டிடங்களின் கட்டிட வேலைகளும் நிறுத் தப்பட வேண்டுமென்றனர்.

நிதி நிலை காரணமாகக் குடும்பநலத்திட்டப் பணிகள் குந்தகப் பட்டுப் போகக் கூடாது. அந்தப் பணியிலே முடக்கம் ஏற்பட அனுமதித்தால், அதனால் ஏற்படும் விளைவுகள் பெரும் பிரச்னையாக மாறும்; மற்ற மற்ற வளர்ச்சிப்பணிகளால் உரு வாகும் நல்ல பலன்கள் அளவுக்கு அதிகமான மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு இணைந்து சென்று ஈடுகொடுக்க முடியாமல், நாட்டவர்க்கு நற்பயனளிக்க ஊரெங்கனும் சுற்றி, ஓடிவரும் ஆறு, கடலோடு கலந்து விட்ட பின்பு உருத்தெரியாமல் போய் விடுவது போல வீணாகிவிடும்; அத்தகைய நிலையை அனுமதிக்க விரும்பவில்லை, இத்திட்டச் செயலாக்கத்தில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள நமது அரசு.

ஆகவே குடும்ப நலத்திட்டக் கட்டிடங்கள் பாதியிலேயே நின்று விடக்கூடாது என்ற எண்ணத்தில், கட்டிடப் பணிகளைத் தொடர்ந்து நடத்தி முடிக்கத் தமிழ்நாடு அரசு, தன் நிதியிலிருந்து ஏறத்தாழ முப்பது லட்ச ரூபாய் வரை ஒதுக்கித் தந்து உதவியுள்ளது. அறுவைச் சிகிச்சை செய்து கொண்டோருக்கு வழக்கமாகக் கொடுக்கப்பட்டு வரும் ஈட்டுத் தொகை மூப்பது ரூபாயை, அறுபது ரூபாயாக உயர்த்தியுள்ளது. அது மட்டுமா? அறுவைச் சிகிச்சையில் மற்றவர்களை ஈடுபடுத்துபவர்களுக்கு, ஒவ்வொரு அறுவைச் சிகிச்சைக்கும் ஊக்குவிப்புத் தொகையாக கொடுக்கப்படுகிறதே பத்து ரூபாய்—அதுவும் நம் நிதியிலிருந்துதான் தரப்படுகிறது. மேலும் தனியார் மருத்துவ நிலையங்களுக்கு, அங்கு நடக்கும் ஒவ்வொரு ஆண் அறுவைச் சிகிச்சைக்கும் பத்து ரூபாயும், ஒவ்வொரு பெண் அறுவைச் சிகிச்சைக்கும் இருபத்தைந்து ரூபாயும் தமிழக அரசு நிதியிலிருந்து மான்யமாகத் தரப்படுகிறது. இது அறுவைச் சிகிச்சை செய்து கொண்டோருக்குத் தரப்படும் ஈட்டுத் தொகையைத் தவிர தனியாக வழங்கப்படுவதாகும்.

தொழிலாளருக்குச் சலுகை

மேலும் தொழிலாளர் நலம் பேணும் நமது அரசு—பொதுத் துறையில் தொழிலாளர்களையே பங்குதாரர்களாக்கும் புரட்சிகரத் திட்டத்தைச் செயல் படுத்தும் நமது அரசு—தொழிலாள நண்பர்களிடையே குடும்பநலத் திட்டத்திற்கு ஆக்கந்தேட வேண்டி, தனியார் துறையிலும், பொதுத் துறையிலும் உள்ள தொழில் நிறுவனங்களுக்கெல்லாம் வேண்டுகோளொன்று அனுப்பி வைத்துள்ளது. அதில், வழக்கமாக அளிக்கப்படும் ஈட்டுத்தொகையோடுகூட, அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளும் பெண் தொழிலாளிக்கு நானூறு ரூபாயும், ஆண் தொழிலாளிக்கு இருநூறு ரூபாயும் அந்தந்தத் தொழில் நிறுவனங்களே தந்துதவி ஊக்க மூட்டிடுமல், தொழிலாளத் தோழர்கள், நிரந்தரக்கருத்தடை ஏற்றுச் 'சிறு குடும்ப நெறி' ஏற்கப் பெருவாரியாக முன் வருவார்கள் எனத் தெரிவித்துள்ளது.

இந்த அளவுக்கு இல்லாவிட்டாலும், குறிப்பிட்ட கணிசமான தொகையைப் பல்வேறு தொழில் நிறுவனங்களும், ஆலை நிர்வாகங்களும், தோட்டத் தொழில் நிலையங்களும் ஏற்கனவே தங்கள் நிதியிலிருந்து ஊக்கத்தொகையாக அளித்து வருகின்றன. நமது அரசின் வேண்டுகோளுக்குப் பின், அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் தொழிலாளர்களுக்கு ஓரளவுக்காவது ஊக்கத் தொகை வழங்க மேலும் பல தொழிலக நிர்வாகங்கள் முனைந்து கொண்டிருக்கின்றன.

இப்படிப் பலவகைகளிலும் அளிக்கப்படும் சலுகைகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு தொழிலாள நண்பர்களும், பொது மக்களும் நிரந்தரக் கருத்தடை ஏற்க முன்வர வேண்டுகிறேன். இந்தத் துறையில் ஈட்டும் வெற்றிதான் மற்ற வளர்ச்சிப் பணிகளால் உருவாகும் பலன்கள், சமுதாயம் முழுமைக்கும் பரவலாகக் கிடைக்க வழி வகுக்கும். இல்லை என்றால், எப்படிப்பட்ட பொருளாதார வளர்ச்சியும்—முன்னே காட்டினேனே 'கடலில் கலந்துவிட்ட ஆறு'—அதுபோல் பயனற்றுப் போகும் என்பதை நினைவில் கொண்டு, இயங்கி, நிரந்தரக் கருத்தடை ஏற்கவேண்டுமென அனைவரையும்—சிறப்பாகத் தாய்மார்களையும் வேண்டிக்கொள்கிறேன்.

* *

[தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், குடும்பநலத் தொடர்பான பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு ஆற்றிய சொற் பொழிவுகள் தொகுப்பின் முதல் பகுதியாகும் இந்நூல்.]

பா சிவ இளவழகன் அரசுக்கு - பிரிஞ்சி. 605 006.